நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00


Registered as a News paper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 09 வியாழக்கிழமை (24.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 218




# தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்



## சம்பந்தன் எம்.பி. வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது தனியாகப் பிரிந்து சென்று சுயநிர்ணய அடிப்படையில் செயற்பட அனுமதிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுயநிர்ணய உரிமையை அரசாங்கம் வழங்காது

(கொழும்பு)

தமிழர்களுக்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் சுயநிர்ணய உரிமையை வழங்காது என சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் பதிலளித்தார்.

இனப்பிரச்சினையை அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாகக் குறிப்பிட்ட அவர், யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதல்களில் மூன்று படையினர் பலி

(கொழும்பு)

மன்னார், வவுனியா, மணலாறு, யாழ்ப்பாணக் கள முனைகளில் இடம்பெற்ற தாக்குதல்களில் படையினர் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். 13 பேர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைக்காகக் குரல் கொடுத்தவர் தனது ஆட்சியில் அதனைச் செய்யவில்லை

### முன்னாள் பிரித்தானிய தூதுவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்க சர்வதேச சமூகத்துடன் இணைந்து குரல் கொடுத்தார்.

ஆனால் அவர் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது என இலங்கைக்கான பிரித்தானிய முன்னாள் உயர்ஸ்தானிகர் டேவிட் க்ளேட்ஸ் டோன் தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்ற பிரித்தானிய இராஜதந்திரியும் மனித உரிமை செயற்பாட்டாளருமாகிய டேவிட் க்ளேட்ஸ் டோன் இலங்கையில் தான் பணியாற்றிய காலப் பகுதி தொடர்பாக எழுதிக் கொண்டிருக்கும் நூல் குறித்து பி.பி.சியின் சிங்களச் சேவைக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பிரித்தானிய உயர்ஸ்தானிகராக நான் பணி (12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின்
க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான
இரசாயனவியல் - II
பாட மாதிரி வினாத்தாள்.

## அரசியல் கட்சிகளின் தேவைக்காக திட்டங்களை மேற்கொள்ள முடியாது

### ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

குடிமக்களின் அபிலாஷைகளுக்கு இணங்கவே அரசாங்கம் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதனை விடுத்து வெளிநாடுகளினதோ அல்லது அரசியல் கட்சிகளினதோ தேவைக்காகத் திட்டங்களை வகுக்க முடியாது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற மாமிச உணவு உற்பத்திப் பொருள் ஏற்றுமதியாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் கூறி (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பினை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை

### ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தன்னிச்சையான யுத்த நிறுத்த அறிவிப்புக்குப் பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி. கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, தமிழீழ விடுதலைப்புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்வதோ அல்லது அவ்வமைப்பின் மாயா ஜாலத்துக்கு மயங்கி மீண்டும் பேச்சு வார்த்தைக்குச் செல்வதோ இப்போதைய சூழ்நிலையில் தேவையற்றதொன்றாகும் எனத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி பாதிப்பு

### புலிகளின் சமாதான செயலகம் அறிக்கை

(கிளிநொச்சி)

வன்னிப் பிரதேசத்தில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் 35 ஆயிரம் பேர் முன்பள்ளிக்குச் செல்லும் சிறுவர்கள் என விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

வன்னியில் தொடரும் இடப்பெயர்வு காரணமாக பெரும் எண்ணிக்கையிலான பாடசாலைகளும் இடம்பெயர்ந்துள்ளதாகவும் இதனால் அந்தப் பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் இடம்பெயராதுள்ள பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவையும் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் இடம்பெயராத பாடசாலைகள் இரண்டாம் தவணைப் பரீட்சை நடத்த முடியாமல் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் வன்னிப் பகுதியில் ஒரு செயற்கையான (12 ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் யுவதி சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக் காத்தான்குடி பூநொச்சிமுனைப் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் யுவதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சுட்டுக் கொல்லப்பட்ட யுவதி சுமார் 18 வயது மதிக்கத்தக்கவர் என காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் அடையாளம் காணும் பொருட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (சு)

# வெளிநாட்டுப் படை இலங்கைக்கு வந்தால் அரசாங்கத்தை தோற்கடிப்போம்

## ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

பலவீனமடைந்து தோல்வியின் விளிம்பில் இருக்கும் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளனர்.

இது சார்க் நாடுகளையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் வித்தையாகும். புலிகளின் யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் நிராகரித்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய அமைப்பாளருமான அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கும் இறுதிச் சந்தர்ப்பத்தை எமது படையினர் அடைந்துள்ள நிலையில் சார்க் மாநாட்டை இங்கு நடத்துவது சர்வதேச ரீதியில் எமக்கு சாதகமான நிலைமையை ஏற்படுத்தும்.

சார்க் மாநாட்டு பாதுகாப்பிற்காக வெளிநாட்டுப் படையினருக்கு இடமளிக்கப்படுமானால் அதற்கு எதிராக நாடாளுமன்றத்தில் பிரேரணையை முன்வைத்து அரசாங்கத்தை தோல்வியடையச் செய்வோம் என்றும் அவர் கூறினார்..

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அத்துரலிய ரத்ன தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது,

புலிகளின் யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் நிராகரித்துள்ளதோடு படை நடவடிக்கைகள் தொடரும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளதை ஹெல உறுமய வரவேற்கின்றது.

மன ரீதியாகவும், யுத்த ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் சர்வதேச ரீதியிலும், தமிழ் மக்கள் மத்தியிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்

என்வே ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். இது போதாது. ஆயுதங்களை அரசாங்கத்திடம் அவர்கள் கையளிக்கவேண்டும். அதன் பின்பே சமாதானப் பேச்சு. இல்லாவிட்டால் எதற்கும் இடமில்லை.

இலங்கையில் சார்க் மாநாட்டை நடத்துவதை வரவேற்கின்றோம். இன்றைய நிலையில் இது எமக்குத் தேவையானது. இதன் மூலம் சர்வதேசத்தின் மத்தியில் எமக்கு சாதகத் தன்மை உருவாகும். அதேவேளை எந்த ஒரு நாட்டுத் தலைவரும் வேறு ஒரு நாட்டுக்குச் செல்லும்போது அவரது மெய்ப்பாதுகாவலர்கள் செல்வது வழக்கமானது.

எமது ஜனாதிபதி வெளிநாடு சென்றாலும் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் செல்வார்கள். அதேபோன்றே இந்தியப் பிரதமரினதும் மெய்ப்பாதுகாவலர்கள் இங்கு வருகின்றனர் என்றார். (ச-5)

## 'தகவல் களம்' சஞ்சிகை வெளியீடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஜெஸ்வின் கணனி மாணவர் அபிவிருத்திக் குழுவின் தகவல் களம் சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்று பருத்தித்துறை சிவன் கோவில் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ஜே. எக்ஸ்.பேணாட் றெக்னோ அடிகளார் ஆசி வழங்குவார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சிவநேசன், தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபை இணைப்பாளர் கே.கிருஷ்ணபாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர். (ச-52)



கரித்தாஸ் -கியூடெக் நிறுவனத்தின் தேசிய உயிர்ப்பூட்டல் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை சுப்பர்மடத்தில் நடத்தப்பட்ட தொழில் மேம்பாட்டுக்கான வதிவிடப் பயிற்சி நெறியில் சான்றிதழ்கள் பெற்ற இளைஞர் யுவதிகள் கரித்தாஸ் -கியூடெக் நிறுவனவளவாளர்களுடன் காணப்படுகின்றனர். (படங்கள்: பருத்தித்துறை நிருபர்)

# மனித உரிமை மீறல்களைக் குறைக்க அரசாங்கத்தின் தேசிய திட்டம்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை மீறல்களை குறைக்கும் நோக்கில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் முக்கியத்துவம் குறித்து பாதுகாப்பு படையினருக்கும் பொலிஸாருக்கும் அறிவூட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

மனித உரிமைகளுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களிலும் இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்திலிருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த 6 மாதங்களில் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவிருக்கும் மனித உரிமைகள் தொடர்பான தேசிய திட்டத்திற்கு ஆதரவு வழங்க பலநாடுகளில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுக்கள் முன்வந்திருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அதிகரித்திருக்கும் மனித உரிமை மீறல்களை குறைப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு தேசிய திட்டத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-5)

# தொடரும் கடும் மழையினால் அட்டனில் நேற்று மண்சரிவு

(கொழும்பு)

மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்றுப் பெய்த கடும் மழையினால் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அட்டன் பிரதேசத்திலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் பெய்த கடும் காற்றுடன் கூடிய மழையினால் பொஸ்கோ வீதி, திம்புள்ள வீதி, டிக்கோயா வீதி உட்பட பல்வேறு வீதிளும் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளானர்கள் அத்துடன் வியாபாரிகளும் விவசாயிகளும் பெரிதும் பாதிப்படைந்தனர்.

இதேவேளை மேற்படி இம்மழையினால் அட்டன் கினிகத்தேனை வீதிக்கு இடைப்பட்ட கடவல பிரதேசத்தில் காலை 7 மணியளவில் ஏற்பட்ட மண் சரிவினால் சுமார் ஒரு மணி நேரத்திற்கு போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இதனால் அட்டன் -கொழும்பு, அட்டன்-கண்டி பிரதான வீதிப்போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.

பின்பு பொதுமக்கள், பொலிஸாரின் முயற்சியால் பாதையில் இருந்த மண் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 8 மணியளவில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. (சு)

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 10 பேர் இளவாலை பொலிஸாரால் கைது

(மல்லாகம்)

இளவாலைப் பகுதியில் சட்டவிரோத முறையில் மின்சாரம் பெற்ற 10 பேர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மேற்படி 10 பேரும் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்களை 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்துமாறும் மின்சார சபைக்கு தலா 5ஆயிரம் ரூபா கட்டணமாக வழங்குமாறும் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சரோஜினிதேவி இளங்கோவன் உத்தரவிட்டார். (ச-5)

## உதைபந்தாட்டப்போட்டி


(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக்கால் நடத்தப்படும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் நேற்று நடந்த காலிறுதிப் போட்டியில் பாடுமீன் ஏ மற்றும் சென். மைக்கல்ஸ் அணிகள் வெற்றி பெற்றன.

பாடுமீன் ஏ அணிக்கும் சென். நீக்கிலஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் 4:1 என்ற கோல் கணக்கில் பாடுமீன் அணி வெற்றி பெற்றது.

மற்றொரு போட்டியில் பாடுமீன் பி அணியை எதிர்த்தாடிய சென். மைக்கல்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதேவேளை அரையிறுதிப் போட்டிகள் அடுத்தவாரம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ச)



சோனக தெரு அல்ஹதீஜா முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி நேற்று நடைபெற்றது. அக்கண்காட்சியில் வைக்கப்பட்ட பள்ளிவாசல் வடிவில் அமைக்கப்பட்ட ஆக்கத்தையும், முன்பள்ளி மாணவர்களுடன் பள்ளி நிர்வாகத்தினரையும் படங்களில் காணலாம்.

## சடலத்தை அடையாளம் காணக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸாரால் கடந்த 21 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சடலமானது இதுவரை எவராலும் உரிமை கோரப்படவில்லை. அவருடன் இருந்த அடையாள அட்டையின்படி அவரது பெயர் பொன்னுத்துரை விஜயரத்தினம் (வயது 34), நகுலேஸ்வரன் வீதி, கீரிமலை, தெல்லிப்பழை என உள்ளது.

உரித்துடையோர் இச்சடலத்தை 5 நாட்களுக்குள் அடையாளம் காணும்படி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# இன்று ஒரு தகவல்

## பயமும் பாதுகாப்பும்

ஒருவனோடு சண்டையிட்டு நாம் ஜெயித்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். நம் மனதுக்குள் சந்தோஷமாக இருந்தாலும் உள்மனதில் ஒருவித பயம் உண்டாகலாம்.

தோற்றவன் சும்மா இருப்பானா? அவன் மறுபடியும் எப்பொழுது சந்தர்ப்பம் வரும் என்று காத்துக்கொண்டு தானே இருப்பான். அதனால் வெற்றியின் ஒருபக்கம் சந்தோஷமாக இருந்தாலும் இன்னொரு பக்கம் பயமாகத் தான் இருக்கும்!

ஒரு மன்னன் அயல் நாடுகளுடன் எல்லாம் போரிட்டு வென்றான். இருந்தாலும் அவனுக்கு மனதிற்குள் ஒரு பயம் உண்டானது. பகை மன்னர்களெல்லாம் படையெடுத்து வந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம்!

எல்லோரும் வந்து இந்த மாளிகையைக் கைப்பற்றி விட்டால் என்ன பண்ணலாம் என்று யோசித்தான்! நடுங்க ஆரம்பித்தான். ``ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டார் அமைச்சர். இவன் விவரத்தைச் சொல்ல, இருவரும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டனர்.

அதன் பிரகாரம் ஒரு பெரிய மாளிகை ஒன்றை கட்டினார்கள். அதற்கு ஜன்னல் எதுவும் கிடையாது உள்ளே போய்வர ஒரே ஒரு கதவு மட்டும்தான் இருந்தது! அதைத் தவிர அந்த மாளிகைக்கு வேறு எந்த வழியும் இல்லை! ஒரு சிறிய துவாரம் கூட விட்டுவைக்காமல் எல்லாவற்றையும் அடைத்துவிட்டார்கள்.

கதவு இருக்கும் வழியைப் பாதுகாக்க ஏராளமான வீரர்கள் காவலுக்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். இவ்வளவும் செய்து முடித்த பின்புதான் மன்னனுக்கு திருப்தியாக இருந்தது.

ஒருநாள் ராஜாவும் அமைச்சரும் அந்த கதவு வழியாக வெளியே வந்தார்கள்! ``என்ன அமைச்சரே? எப்படி நமது ஏற்பாடு?'' என்று அட்டகாசமாக சிரித்துக்கொண்டே கேட்டார் ராஜா. ``அபாரம்!'' என்றார் அமைச்சர்.

இவர்கள் இருவரும் இப்படி பேசிக்கொண்டதை கேட்டதும் வீதி ஓரமாக உட்கார்ந்திருந்த ஒரு பெரியவர் சிரித்துவிட்டார். அவர் சிரித்ததைப் பார்த்ததும் மன்னனுக்குக் கோபம் வந்துவிட்டது!

``ஏனப்பா சிரிக்கிறாய்?'' என்று கேட்டார். அதற்கு அந்த பெரியவர், ``ரொம்ப புத்திசாலித்தனமாகத்தான் இந்த மாளிகையைக் கட்டியிருக்கிறீர்கள்! பாதுகாப்பாகத்தான் இருக்கிறது! இருந்தாலும் ஒரு குறை தெரிகிறது!

வேற வழியே வைக்காமல் மாளிகை கட்டிய நீங்கள் எதற்காக ஒரே ஒரு வழிமட்டும் வைத்திருக்கிறீர்கள்? அந்த வழியாக எதிரிகள் நுழைந்தால் என்ன செய்வீர்கள்?

அதையும் ஒரு கருங்கல் சுவர் எழுப்பி அடைத்துவிடுங்கள்! அதுதான் நல்லது. அதற்குப் பிறகு எதிரிகள் பயமில்லாமல் நீங்கள் உள்ளேயே உட்கார்ந்திருக்கலாம். அதுதான் சிறந்தது!'' என்றார். மன்னன் யோசித்தான். பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது.

``அது சரி... நீங்கள் சொல்வது போலவே அந்த ஒரு வழியையும் அடைத்துவிட்டால், இந்த மாளிகை ஒரு கல்லறை போல் ஆகிவிடுமே!'' என்றார்.

``இப்ப மட்டும் எப்படி இருக்கிறது? கல்லறை மாதிரி தானே இருக்கிறது!'' என்றார் பெரியவர். பின் அதற்கான விளக்கமும் கொடுத்தார்.

``உங்கள் மாளிகையில் எவ்வளவு ஜன்னல்களும், கதவுகளும் இருக்கிறதோ... அந்த அளவுக்கு வெளி உலகத்தோடு உங்களுக்கு தொடர்பு இருக்கிறது! வாழ்க்கையில் ஓர் இயக்கம் இருக்கிறது! கதவுகளை மூட மூட வாழ்க்கையும் அடைபட்டுப்போகும்.''

``நானும் ஒரு காலத்தில் மாளிகையில் தான் இருந்தேன். அதன் சுவர்களின் எவ்வளவுதான் தள்ளிப் போட்டாலும் என் வாழ்க்கைக்கு அவைகள் எல் லைக்கோடுகளாக இருப்பதை உணர்ந்தேன்.

வாழ்வுக்கு எல்லையே இருக்கக் கூடாது என்று நினைத்து இப்படி வந்து விட்டேன். இப் பொழுது என் வாழ்வுக்கு வானம் தான் கூரை! இந்த நிலம் தான் என் மாளிகை இப் பொழுது தான் வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க முடிகிறது!'' என்றார் அந்தப் பெரியவர்.

அந்த அரசர் ஒரு பெரிய தத்துவத்தை புரிந்துகொண்டார். தனது மாளிகைக்கு நிறைய ஜன்னல்களையும், கதவுகளையும் வைக்கச்சொல்லி உத்தரவிட்டார். ஒரு சுடுகாட்டில் கல்லறையின் மீது கால்மேல்த கால்போட்டு உட்க்கார்ந்திருந்தான் ஒருவன். அந்த வழியாகப் போன ஒருவர் அவனிடம்த ``ஏனப்பா இப்படி பேய் பிசாசு நடமாடுகின்ற இந்த மயானத்துக்கு வந்து கல்லறைக்கு மேல் உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று கேட்டார்.

``எவ்வளவு காலம்தான் உள்ளேயே இருக்கிறது... ஒரே புழுக்கமாக இருந்தது... அதுதான் காற்றுவாங்கலாம் என்று வெளியே வந்தேன்!'' என்றானாம் அந்த ஆள்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

### இந்திய அரசின் நம்பிக்கை வாக்கெடுப்பு வேளையில்

# ஒரு கோடிரூபா பணக்கட்டுடன் சபைக்கு வந்த உறுப்பினர்கள்

(புதுடில்லி)

தங்களை விலைக்கு வாங்க முயற்சி நடப்பதாகக் கூறி பணக் கட்டுகளுடன்பா.ஜ.க.எம்.பி.க்கள் மக்களவையில் அமளியில் ஈடுபட்டனர். சுமார்1 கோடி மதிப்புள்ள ஆயி ரம் ரூபாய் பணக்கட்டுக்களை சபையின் மத்தியில் உள்ள மேசையில் கொட்டிய மத்தியபிரதேசத்தின் மொரீனா மக்களவைத் தொகுதியைச் சேர்ந்த பா.ஜ.க.எம்.பி. அசோக் ஆக்ரால் இந்தப்பணத்தை தனக்கு சமாஜ்வாடி கட்சி தந்ததாக குற்றம் சாட்டினார்.

இதையடுத்து பிற பா.ஜ.க. எம்.பி.க்களும் அவையின் மையத்தில்ள குவிந்து அரசு க்கு எதிராகக் குரல் கொடுத்தனர். இந்த சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த சபாநாயகர் சோம்நாத்சட்டர்ஜி அவையை உடனடியாக ஒத்திவைத்து விட்டு சென்று விட்டார்.

இது குறித் து பா.ஜ.க. தலை வர் அத்வானி கூறுகையில், பங்கன் சிங் குலாஸ்தே, அசோக் ஆக்ரால், பகாரே ஆகிய மூன்று பா.ஜ.க. எம்.பி.க்களுக்கு வாக்களிக்க வர வேண்டாம் என்று கூறி தலா ரூபா3 கோடிக்குபேரம் பேசப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டமாக ரூபா 1 கோடிபணம் தரப்பட்டுள்ளது. இதை அவர்கள் என்னிடம்தெரிவித்து அதை மக்களவையிலேயே காட்டுவதாகக் கூறினார். இதையடுத்து நானும் பணத்தை மக்களவைக் குள் கொண்டுவர அனுமதி கொடுத்தேன்.

வாக்களிக்க வராமல் இருந்தால் மேலும் ரூபா 1.5கோடி தருவதாகக் கூறுயுள்ளனர். இதற்கான மொத்தடீல் ரூபா 9கோடி. கடந்த 3,4 நாட்களாக இந்தப்பணம் தரப்பட்டது.

இந்த பணம் கைமாறியதை ஒரு தனியார்தொலைக்காட்சிபதிவு செய்துள்ளது. அது எந்தசேனல் என்பதை நான்சொல்ல முடியாது என்றார். (அ)

# பாதுகாப்பை அதிகரிக்கக்கோரி கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

தமக்குரியபாதுகாப்பு நடவடிக்கைகளைஅதிகரிக்க வேண்டுமெனக் கோரிகிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபை அமர்வினை பகிஷ்கரித்து வெளியேறினர். ஐ.தே.க.மட்டு மாவட்ட உறுப்பினர் அரசரட்ணம் சசிதரனின் வீட்டின் மீது கடந்த 11ஆம் திகதி கைக்குண்டு வீசப்பட்டதில் அவரது இரண்டு மெய்ப்பாது காவலர்கள் படுகாயங்களுக்குள்ளாகிமட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் உறுப்பினர் களின்பாதுகாப்பு உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் தற்போது தமக்குஇரண்டுபொலிஸாரே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த சபை நடவடிக்களை பகிஷ்கரித்து விட்டு அங்கிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.

இந்தபகிஷ்கரிப்பு நடவடிக்கை தொடர்பாக அமைச்சரவை பேச்சாளர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவிக்கையில்,

இதற்கான நடவடிக்கைகள்தற் போது இடம் பெற்று வரும் நிலையிலேயே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபை நடவடிக்கைகளை புறக் கணித்துள்ளனர் என்றார். எதிர்க் கட்சியின் ஐக்கியதேசியக்கட்சி உறுப் பினர் கள்சபை நடவடிக்கைகளை இவ்வாறு புறக்கணித்த போதும் ஜே. வி.பி.உறுப்பினர்விமல் பிய திஸ்ஸ சபை நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். (அ)

# இராசிபலன்

24.07.2008
(ஆடி 09 , வியாழக்கிழமை)
உத்தரட்டாதி முற்பகல் 7.41 மணிவரை
ஷஷ்டி பிற்பகல் 12.31 மணிவரை
இராகுகாலம் 01.32-03.02 மணிவரை
சுபநேரம்-07.32-09.02 மணிவரை
ஊரெழு கிழானைப்பதி
பருவதவர்த்தனி அம்மன் கொடி

| | |
|---|---|
| மேடம் | சோம்பல் நிலை, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், திடீர்பயணம். |
| இடபம் | நண்பர்கள் உதவி, குடும்ப சுகம், சயனசுகம், தனவருவாய். |
| மிதுனம் | எடுத்தகருமங்கள் கைகூடும், நன்மெ காடை, அதிகாரம். |
| கடகம் | எதிர்பாராத செலவு, பிரயாணம், தொழில் மந்தநிலை, வீண்பயம். |
| சிங்கம் | கடன் பிரச்சினை, வாகனபயம் காரிய தடங்கல், தர்மம். |
| கன்னி | மனோதைரியம், சென்ற இடத் தில் செல்வாக்கு, தொழில் நன்மை |
| துலாம் | அதிகபிரயாசை, போசன நன்மை, சத்துரு ஜெயம், உடல்நலம். |
| விருச்சிகம் | காரியஇடையூறு, புத்திரரால் கவலை, பூர்வபுண்ணிய கருமம். |
| தனுசு | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், போசனசுகம், சுபசெலவு. |
| மகரம் | பிரயாண நன்மை, காரியசித்தி, கீர்த்தி, உறவினர் உதவி. |
| கும்பம் | கடினவார்த்தை, எடுத்தகாரியம் தாமதமாகும், தனவிரயம். |
| மீனம் | சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, கலந்துரையாடல், போசனசுகம். |

வளவன்

# புலிகள் தப்பிச் செல்வதை தடுக்க விசேட ஏற்பாடு!

## கடற்படைப் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் தோல்வியடைந்து வரும் புலிகள் கடல் வழியாக தப்பிச் செல்வதைத் தடுப்பதற்கும் அவர்களுக்கான விநியோகங்களைத் துண்டிப்பதற்கும் ஏற்ற வகையில் வட பகுதி கடற்பரப்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் கடற்படையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படைப்பேச்சாளர்கொமாண்டர் டி.கே.பி.தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் திங்கட்கிழமை காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கடற்படைப்பேச்சாளர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

மன்னாருக்கும் நெடுந்தீவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் அமுல்ப் படுத்தப்பட்டுள்ள இந்த விசேட கடல் பாதுகாப்புத் திட்டத்தில் 50க்கும் மேற்பட்ட கடற்படைப்படகுகள்ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்கள் வருவதும் அவர்களைப் போன்று புலிகள் தப்பிச் செல்வதும் புலிகளுக்குத் தேவையான விநியோக நடவடிக்கைகள் இடம்பெறுவதும் மிக நீண்ட காலப் பிரச்சினைகளாகும். இவற்றைக் கட்டுப்படுத்தவே இப்புதிய கடற்பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பலனாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் பிரவேசிப்பது தடுக்கப்பட்டுள்ளது. கடந்த 2ஆம் திகதி இந்தப் பிரதேசத்திற்குள் வர முயற்சித்த சுமார் 289 இந்திய மீனவர்கள் சோதனையிடப்பட்ட பின்னர் திருப்பியனுப்பப்பட்டனர். இதன் பின்னரே இப்புதிய கடல் பாதுகாப்புதிட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் அவர்மேலும் தெரிவித்தார்.(அ-5)



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அராலி கோமாதா அறநெறிப் பாடசாலையில் நடாத்தப்பட்ட மாணிக்க வாசகர் குருபூசையில் த.பிரதீஸ்வரன் தலைமையுரையாற்று வதையும் நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்களையும் படத்தில் காணலாம்.

## நயினையில் ஆடிப்பூரம்

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் ஓகஸ்ட் 4ஆம் திகதி நடைபெறவுள்ள ஆடிப்பூர உற்சவத்தினை முன்னிட்டு, எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை அம்பாளுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று இலட்சார்ச்சனை ஆரம்ப மாகும்.

இலட்சார்ச்சனையைத் தொடர்ந்து ஒன்பது தினங்கள் காலை, மாலை வேளைகளில் நடைபெறும்.

ஆடிப்பூர நட்சத்திர தினமாகிய 4.8.2008 திங்கட்கிழமையன்று உற்சவ நாயகிக்கு விசேட திரவிய நவோத்திர சகஸ்ர (1008 சங்குகள்) சங்காபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பூரகர்மா நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெறும். அழகிய தாமரைப் பூவாகனத்தில் அம்பாள் எழுந்தருளி வீதி உலா வரும் அருட்காட்சியும் இடம்பெறும்.

வருகைதரும் அடியார்களுக்கு நயினை ஸ்ரீ நாகபூஷணி, அம்மன் அன்னதான சபையினர் அமுதசுரபி மண்டபத்தில் அன்னதானம் வழங்கும் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக "ஆடிப்பூரத் திருவிழா" உபயகாரர்கள் ஒன்றியத் தலைவர் மு.நா.நடராசா தெரிவித்துள்ளார்.

## நினைவு தினம்

வடபுலத்து தொழிற்சங்க போராளி தோழர் ஜெயம் தர்மகுலசிங்கத்தின் 59ஆவது நினைவுதினம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு 189, வேம்படி வீதியிலுள்ள அகவிழி காரியாலயத்தில் A.C. ஜோர்ஜ் தலைமையில் நடை பெறும். நினைவு உரையை சொ.சிவபாலன் நிகழ்த்துவார். (அ)

## அனைவருக்கும் ஆங்கிலக் கல்வி 86 பேர் தெரிவாகினர்

(யாழ்ப்பாணம்)

"அனைவருக்கும் ஆங்கிலக் கல்வி" என்ற செயற்திட்டத்தின் கீழ் யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட வார நாட்கள் பிரிவில் 44 பேரும் வார இறுதி நாட்களின் பிரிவில் 42 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (ச-5)

## கலை விருந்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் பழைய மாணவர் சங்கம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலை விருந்து எனும் இசை நடன நிகழ்வை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இந்நிகழ்வு கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் பாடசாலை மாணவர்களுக்காக காலை 9 மணிக்கும் பொதுமக்களுக்காக மதியம் 2 மணிக்கும் நடைபெறவுள்ளது. (ஓ)

## முன்பள்ளிக் கண்காட்சி அறிவுறுத்தல் கூட்டம்

வடமராட்சி வலய முன்பள்ளிக் கண்காட்சி, கலை நிகழ்வு தொடர்பான அறி வுறுத்தல் கூட்டம் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் அறிவுறுத்தற் கூட்டத்திற்கு வடமராட்சி வலயத்திற்குட்பட்ட அனைத்து முன்பள்ளிகளின் ஆசிரியர்களும் தவறாது பங்கு கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கேட்டுக்கொள்கின்றார். (ஓ-52)

# இலங்கை வங்கியின் பரிசில் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி, யாழ்.மாவட்டத்தில் 2007ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் மாவட்டத்தில் முதல் 6 இடங்களைப் பெற்றவர்களுக்கு க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கும் பரிசில்களை வழங்கி கௌரவிக்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பணியில் இருந்த போது காலமான இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளை உத்தியோகத்தருக்கு கிடைக்கவேண்டிய காப்புறுதித் தொகையும் வழங்கப்பட வுள்ளது.

பரிசில்களைப் பெறும் மாணவர் விபரம்

**5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை**

ச.வானதி-காங்கேசன்துறைக்கிளை, ம.மதுஷன்-யாழ்.மேற்தரக்கிளை, ப.மேஷிகன்-யாழ்.மேற்தரக்கிளை, சு.சங்கவி-யாழ். மேற் தரக்கிளை, க.சங்கீத்-அச்சுவேலி, ம.துஷிதா-நெல்லியடி.

**க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை**

கு.நிருஷன்-யாழ்.இந்துக்கல்லூரி, ந.திருத்தணிகன்-யாழ்.இந்துக்கல்லூரி, ச.ருக்ஷிகா-யாழ்.வேம்படி மகளிர்கல்லூரி.

இவ் வைபவத்தில் யாழ்.மாவட்ட இலங்கை வங்கி கிளைகளின் முகாமையாளர்களும் பாடசாலை அதிபர்களும் கலந்துகொள்வார்கள். ஓ


# ஆசிரிய வாண்மை விருத்தி தின விழாவும் சஞ்சிகை வெளியீடும்

வடமராட்சி கல்வி வலய ஆசிரிய மத்திய நிலையத்தினால் நடாத்தப்படும் ஆசிரிய வாண்மை விருத்திதின விழாவும் கல்வியியல் சஞ்சிகை "கூடு" வெளியீடும் 26 ஆம் திகதி காலை 9மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பௌதிகவியல் பேராசிரியர் கே.கந்தசாமி கலந்துகொண்டு "தற்காலக் கல்விமுறையில் ஆசிரியர் பங்களிப்பு" எனும் பொருளில் சிறப்புப் பேருரை ஆற்றவுள்ளார்.

அத்துடன் ஆசிரிய மத்திய நிலையத்தினால் வெளியிடப்படும் "கூடு" கல்வியியல் சஞ்சிகையினையும் வெளியிட்டு வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சகல பாடசாலை அதிபர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், அலுவலர்கள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுக் கொள்கின்றார். (ஓ-19)




# வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே Dr.W.R.HOLMS ஞாபகார்த்தமாக மாபெரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் 31.1.2ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இச் சுற்றுப்போட்டியில் 17 மற்றும் 19 வயது ஆண்கள் அணிகள் பங்குபற்றவுள்ளன. மேற்படி போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும், கிடைக்கப்பெறாத பாடசாலைகளும் இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளும் விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணக் கல்லூரி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் அறிவித்துள்ளார்.

இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றவுள்ள அணி ஒழுங்குதெரிவும் போட்டி தொடர்பான ஏனைய விடயங்களும் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணியளவில் இல 464 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் மண்டபத்தில் இடம்பெறும் என்றும் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்கின்ற பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களை பெற்றுக்கொள்கின்ற அணிகளுக்கு அகில இலங்கை பாடசாலை கூடைப்பந்தாட்ட சங்கத்தின் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதோடு அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையே நடைபெறுகின்ற கூடைப்பந்தாட்ட போட்டிகளுக்கு பங்குபற்றும் வாய்ப்பும் கிடைக்கப்பெறவுள்ளது.

எனவே கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலை கூடைப்பந்தாட்ட அணிகளையும் தவறாது கலந்துகொண்டு சுற்றுப்போட்டிகள் சிறப்பாக அமைய ஒத்துழைப்பு வழங்குமாறு அதிபர் நோயல் விமலேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-27)

## சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் மாணவர்களுக்கு நிதியுதவி

(பருத்தித்துறை)

கரவெட்டி சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் கொடிதின சேகரிப்பு நிதியிலிருந்து ஒவ்வொரு வருடமும் மாணவர்களுக்கான நிதி உதவியை வழங்கி வருகின்றது.

இவ்வருடமும் இவ்வழங்கு தொகையை வழங்குவதற்கு ஏதுவாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக விபரங்கள் சேகரிக்கப்படவுள்ளதால் இதற்காக தயாரிக்கப்பட்டபடிவத்தில் மாணவர்களின் 2007ஆம் ஆண்டு பரீட்சை பெறுபேற்று விபரங்களை அவ்வப் பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தித் தருமாறு வடமராட்சி கல்விக் கோட்டங்களை கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதன் மூலம் 2007ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை மாகாணமட்டப் போட்டி, க.பொ.த. (சா.த) பரீட்சை, க.பொ.த.(உ.த) பரீட்சை ஆகியவற்றில் சித்திபெற்ற மாணவர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன. (ஓ-19)

## பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இம்மாதம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு புதிய செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ-19)

## உள்ளூராட்சி வாரம்

(யாழ்ப்பாணம்)

2008ஆம் ஆண்டு உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு திறம்பட செயற்படும் சனசமூக நிலையங்களை தெரிவு செய்து கௌரவித்தல், 25 வருடங்கள் முன்பள்ளி ஆசிரியராகச் சேவையாற்றிய ஆசிரியர்களை கௌரவித்தல், சனசமூக நிலையங்களால் சிரமதான நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் மரநடுகை நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் போன்ற நிகழ்வுகள் சனசமூக நிலையங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக வலி. வடக்கு பிரதேசசபை (மல்லாகம்) செயலாளர் இ.அருணகிரி தெரிவித்துள்ளார். (ஓ-15)

## கருத்தரங்கு


க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான இந்துநாகரிக கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கும், அரசியல் விஞ்ஞானமும் மூலதத்துவமும் கருத்தரங்கு நாளை காலை 9மணிக்கும் கொக்குவில் இந்து கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் ஏ.அகிலதாஸ் அறிவித்துள்ளார். (அ)

## சேவை விபரப் பட்டியலில் விபரங்களை பதிவு செய்தல்

(தென்மராட்சி)

இடம்பெயர்ந்து தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இன்று வியாழக்கிழமை சம்பளப் பட்டியலில் கையொப்பமிடுவதுடன் சேவை விபரப் பட்டியலில் தமது விபரங் களை பதிவும்படியும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ-29)





யாழ்.கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் அழகியல் கண்காட்சி அண்மையில் கனரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

காட்சிக்கு வைக்கப்பட்ட சித்திரங்களையும் மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 46



### கோல்புறூக் கெமறன் அரசியற்றிருத்தம்

ஆங்கிலேயர் இலங்கைக் கரைநாடுகளைக் கைப்பற்றி அரசாண்ட காலத்திலே குடியேற்ற மந்திரியார் காரியாலயம் என்றும், முறையான திணைக்கள அலுவல்கள் என்றும் இங்கிலாந்தில் இருக்கவில்லை. மந்திரிகளில் ஒருவர் இங்கிலாந்துக்குச் சொந்தமான கடல் கடந்த நாடுகள் சம்பந்தமான அலுவல்களை மேற்பார்வை செய்த போதிலும் அவை முறையான அலுவலகமாய் விளங்கவில்லை. இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ்; அயர்லாந்து என்ற நாற்பெரும் பிரதேசங்கள் பிரித்தானியாவென்றும் ஐக்கிய இராச்சியம் என்றும் வழங்க முனைந்த காலமும் அதுவேதான்.

இலங்கையை ஆளவந்த முதலாள்பதியான நோத் அவர்கள் காலத்திலே பிரதம நீதியரசராயும் ஆள்பதியின் ஆலோசனைச் சபையில் முதலாம் அங்கத்தவராயும் இருந்த பெரியார் சேர் அலெக்சாண்டர் யோண்ஸ்ரன் என்பவராவர். அவர் இலங்கையின் அரசியல் அலுவல் காரணமாக இலங்கைக்கு ஒரு சட்டசபை அமைதல் வேண்டும் என 1807 ஆம் ஆண்டளவிலேயே குடியேற்ற மந்திரியாருக்கு ஒரு தகவுரை எழுதியுள்ளார். இப் பெரியார் தமது பிள்ளைப் பராயத் திலே தென்னிந்தியாவிலே வாழ்ந்தவராதலால், ஆசியவாசிகள் மீது அன்பும் அனுதாபமும் கொண் டிருந்தார். அவர் இளமை யிலேயே இலங் கையில் வழக்கறிஞராயிருந்து இராணி அப்புக் காத்து முதலிய உத்தியோ கங்களை வகித்து ஈற்றில் பிரதம நீதியரசராக உயர்த்தப்பட்டவர். இவரால் ஆங்கிலேயராட்சி இலங்கையில் வேரூன்றுவதாயிற்று என்றும் கூறுவர்.

அலெக்சாண்டர் யோண்ஸ்ரனுடைய தகவுரை சிறந்ததாய் இருந்தபோதிலும் அதனை ஆங்கிலேயர் முதலிற் கவனிக்கவில்லை. அக் காலத்தில் நிகழ்ந்த தேர்தல் வைபவமும் அதனால் ஏற்பட்ட மாற்றரசாங்கமும் உத்தியோகத்தர் மாற்றமும் அலெக்சாண்டர் யோண்ஸ்ரனின் தகவுரையை எந்த மூலையில் இட்டனவோ தெரியவில்லை.

### மீள் பார்வை

ஆரம்பத்தில் ஆங்கிலேயர் இலங்கையைப் பரிபாலித்த முறை திருப்திகரமாயிருக்கவில்லை. இலங்கை 25500 சதுரமைல் பரப்புள்ள ஒரு சிறிய தீவாக இருந்தபோதிலும், கரைநாடுகளில் ஒதுவித பரிபாலனமும், கண்டியைச் சூழ்ந்த மலைநாடுகளில் வேறுவிதமான ஆட்சிமுறையும், தமிழர் வாழ்ந்த பிரதேசங்களில் வேறுவித ஆட்சியும் முறையற்றனவாயே இருந்தன.

கண்டிச் சிங்களவர் இலங்கை அரசைத் திரிசிங்கள என்றே என்றும் கருதினார்கள். முன்னர் மிகப்பழைய காலத்திலே ராஜரட்ட, மலாயரட்ட, ருகுணரட்ட என்றும், பிற்காலத்தில் கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்ற மூன்று இராச்சிப் பிரிவுகளாகவும் இலங்கை பரிபாலிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் இப்போது ஆங்கிலேயர் இலங்கை முழுவத்தையும் ஒரு நாடாக்கி விட்டு ஓரரசு எனப் பிரகடனஞ் செய்துவிட்டு விதம் விதமான அரசாங்கங்களை நிலவச் செய்தமை முறை கேடாகவே இருந்தது.


நீதிபரிபாலன முறையிலும் ஒருவருக்கு ஒரு நீதி என்ற அமைப்பில் கண்டியில் உள்ளவருக்கும் கரைநாட்டில் உள்ளவருக்கும் வெவ்வேறான நீதி வழங்கப்பட்டன. ஆள்பதி அவர்களின் மேற்பார்வையில் ஒரு நீதிபரிபாலனமும் உச்சநீதிமன்றம் என்ற உயர்நீதிமன்றத்தின் நீதிபரிபாலனம் எனவும் அவை இருந்தன.


அரசாங்கம் என்றால் ஆள்பதி என்றும், ஆள்பதி என்றால் அரசாங்கம் என்றும் கருதும் அளவில் ஆள்பதி அவர்களின் வரம்பிகந்த அதிகாரமும், மானியமுறையிலமைந்த ஊழியமுறையும், விளைவு வரியும் வெறுக்கத்தக்கனவாயே இருந்தன. இலங்கையின் வருமானத்தைப் பார்க்கிலும் அதன் பரிபாலனச் செலவு அதிகமாய் இருந்தமையை ஆங்கிலேயர் விரும்பவில்லை. ஆகவே இலங்கையில் அரசியல்முறை, நீதிபரிபாலன முறை, பொருளாதார அமைப்பு ஆகியவற்றில் மாற்றம் ஏற்படல் வேண்டுமென எல்லோரும் ஒரே முகமாக விரும்பினர்.


இங்கிலாந்தில் பொதுமக்கள் சபையில் அங்கம் வகித்த நன்மனசுடைய தாராண்மைப் போக்குள்ள பெரியார்கள் பலர் இலங்கை அரசாங்க அமைப்பில் இருந்த முறையீனங்களை வெகுவாகக் கண்டித்துப் பேசினார்கள். அவர்கள் 1. உடனடியாக இலங்கை ஆட்சி அமைப்பு மாற்றி அமைக்கப்படவேண்டும்,

**க.சி.குலரத்தினம்**

2. ஊழியமுறை நீக்கப்படல்வேண்டும், 3. இலங்கையின் பரிபாலனங் காரணமாக ஒரு சட்டசபை நிறுவப்படல்வேண்டும். ,4. கட்டுப்பாடில்லாத நீதிபரிபாலனம் அமைக்கப்படல் வேண்டும், 5. பகிரங்க சேவையில் சேருவதற்கு எல்லோருக்கும் திறமை நோக்கிச்சம சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும் என்பன சம்பந்தமாகவும் பிறமாற்றங்கள் திருத்தங்கள் சம்பந்தமாகவும் பேசினார்கள். (தொடரும்)







அண்மையில் இடம்பெற்ற வல்லிபுரம் குருக்கட்டு சித்திவிநாயகர் ஆலய 1008 சங்காபிஷேக நிகழ்வின் போது சுவாமி வீதியுலா வருவதையும், கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கே.கே.தாஸன்)

# எதிர்கால நோக்கில் 7

யாழ்.மாவட்டத்தின் ஐந்து வலயங்களில் ஒன்றான தீவக வலயத்தில் மட்டும் 72 பாடசாலைகளில் 26 பாடசாலைகள் இயங்கவில்லை. இங்குள்ள ஆரம்பப் பிரிவு மாணவர்களின் எண்ணிக்கைக்கு 197 ஆசிரியர்கள் தேவையாக உள்ள போதிலும் 185 ஆசிரியர்களே உள்ளனர். 12 ஆசிரியர்கள் பற்றாக் குறையாக தேவையாக உள்ளது.

வடமராட்சி வலயத்தில் 77 பாடசாலைகள் ஆரம்பக்கல்வியை (1-5) வழங்கி வந்தபோதிலும் 62 பாடசாலைகளே இன்று இயங்கி வருகின்றன. மருதங்கேணி கோட்டத்தில் மட்டும் 13 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

யாழ்.வலயத்தில் 86 ஆரம்பக் கல்வியை வழங்கும் பாடசாலைகள் இருந்தபோதும் யாழ். கோட்டத்தில் 6பாடசாலைகளும், கோப்பாய் கோட்டத்தில் 6 பாடசாலைகளும் இயங்குவதில்லை.

தென்மராட்சி வலயத்தில் ஆரம்பக் கல்வியை வழங்கும் பாடசாலைகள் 53 இருந்தபோதும் தற்போது 10 பாடசாலைகள் இயங்குவதில்லை.

வலிகாமம் வலயத்தில் மொத்தம் 84 பாடசாலைகள் ஆரம்பக் கல்வியை வழங்குகின்ற பாடசாலைகளாக இருந்தபோதும் 19 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

| வலயம் | இயங்கும் பாடசாலைகள் | தற்காலிகமாக மூடப்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 74 | 12 | 86 |
| தீவகம் | 46 | 26 | 72 |
| வடமராட்சி | 62 | 15 | 77 |
| தென்மராட்சி | 43 | 10 | 53 |
| வலிகாமம் | 65 | 19 | 84 |
| மொத்தம் | 290 | 82 | 372 |

இவ்விபரங்களைக் கொண்டு கல்வி நடவடிக்கைகளை ஆராயும போது நாட்டின் அசாதாரண சூழல் எமது கல்வியில் பின்னடைவுகளையே தோற்றுவிக்கின்றன எனலாம்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை ஏறக்குறைய 82 ஆரம்பப் பாடசாலைகள் செயலிழப்பது என்பது சாதாரண ஒரு விடயமல்ல. ஒரு பாடசாலையை உருவாக்குவது என்பது

**கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம்**
**கல்வியியற்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்.**

பகீரதப் பிரயத்தனமான ஒருவிடயம். அதே வேளை பெருமளவு எண்ணிக்கையிலான பாடசாலைகள் செயலிழந்தமை தமிழர்களின் எதிர்காலத்தில் சந்திக்கும் பாரிய பின்னடைவுகளுக்கு முன்னறிவித்தல் தரும் ஒரு நடவடிக்கையாகும். அங்கு கற்ற மாணவர்கள், கற்பித்த ஆசிரியர் போன்ற மனிதவளங்கள், பௌதீக வளங்கள் எல்லாம் வேகமாக அழிந்துகொண்டிருக்கின்றன. பல பாடசாலைகள் போரினால் பல சேதங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. உடைந்து நொருங்கிய கட்டடங்கள் அதற்குள் கல்வி கற்கும் மாணவர்கள் என்ற ஒரு அமைப்பைத் தான் இன்று காண முடிகின்றது.

இதனால் கல்விக்கான வாய்ப்புக்கள் அதனை முழுமையாகப் பயன்படுத்த

## ஆரம்பக்கல்வி

முடியாத ஒரு நிலையை நாம் அனுபவிக்கின்றோம். இடப்பெயர்வுகள், பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டமை போன்ற காரணங்கள் இன்று பிள்ளைகளின் இடைவிலகலுக்கு காரணங்களாகவும் அமைகின்றன.

இத்தகைய தடைகள் மத்தியிலும் இன்று யாழ்ப்பாண மக்களுக்கு பெரியதொரு கொடையாக இருப்பது கல்விதான். பெற்றோர் பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் தம் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில் மிகுந்த அக்கறை காட்டுகின்றார்கள். இதனால் எழுத்தறிவு வீதம் இலங்கையில் அதிகமாகக் காணப்படுகின்றது.

ஏறக்குறைய அண்மைக்கால யுத்த அனர்த்தங்களினால் பல பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டபோதும் கல்விச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மக்கள் எங்கெல்லாம் இடம்பெயர்ந்து இருக்கின்றார்களோ அங்கெல்லாம் தம் பிள்ளைகளின் கற்றற் செயற்பாட்டிற்குப் பக்கபலமாக அமைந்தார்கள்.

இன்றைய கல்வி நடவடிக்கைகளில் "*சகலருக்கும் கல்வி*", "*இலவசக்கட்டாயக் கல்வி*" என்ற கல்விப் பிரகடனங்கள் நமது நாட்டுக் கல்விக் கொள்கைகளில் காணப்பட்ட போதும் அக் கல்வியைப் பெறுவதற்குத் தடையாகப் பல காரணிகள் அமைந்து விடுகின்றன. பிள்ளைகள் பாடசாலைக்குள் நாளாந்தம் வந்துபோவதுமட்டும்கல்வி அல்ல. அங்கு திட்டமிட்ட முறையில் ஆசிரியர்களால் வழங்கப்படும்கல்வியை முழுமையாகப் பெறுகின்றார்களா என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். இன்றைய நிலையில் பல தமிழ் பாடசாலைகள்இயங்கவில்லை. ஆசிரியர்கள் பலர் தமது சொந்த நலன்களைக் கருதி புலம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். (தொடரும்)

உதைபந்தாட்ட நாயகன் அமரர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவாக
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும்
இன்று
◆ இமையாணன் மத்தி எதிர் கலட்டி ஐ.வி.க
◆ சிவானந்தா எதிர் தொண்.ஒற்றுமை
உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி -2008
மைதானம்:வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுத்திடல்

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை — Pilot Examination


ஆனி 2008 / June 2008

தரம் 13 / Grade 13

இரசாயனவியல்– II / Chemistry -II

3 மணித்தியாலங்கள் / 3 Hours

(நேற்றையத் தொடர்ச்சி...)



பகுதி B

இரு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

5. (a) (i) பின்வருவனவற்றை வரைவிலக்கணப்படுத்துக.
(I) நியமத்தோன்றல் வெப்பவுள்ளுறை
(II) நியமப் பிணைப்புப் பிரிகை வெப்பவுள்ளுறை

(ii) பின்வரும் அட்டவணையில் சில பிணைப்புகளின் நியமப் பிணைப்புப் பிரிகை வெப்பவுள்ளுறை தரப்பட்டுள்ளது.

| Bond | $\Delta H^{\ominus}_{D}$ (kJ mol$^{-1}$) |
|---|---|
| H — H | + 436 |
| Cl — Cl | + 242 |
| N ≡ N | + 945 |
| N — Cl | + 431 |
| N — H | + 389 |

HCl(g) இனதும் $NH_3(g)$ இனதும் பரிசோதனை ரீதியான நியமத் தோன்றல் வெப்பவுள்ளுறைப் பெறுமானங்கள் முறையே - 92 kJ mol$^{-1}$, - 46.0 kJ mol$^{-1}$ எனப் பெறப்பட்டது.

(I) HCl (g) இனதும், $NH_3(g)$ இனதும் நியம தோன்றல் வெப்பவுள்ளுறைகளைக் காண்க.

(II) HCl(g), $NH_3(g)$ ஆகியவற்றின் நியமத் தோன்றல் வெப்பவுள்ளுறையின் பரிசோதனை ரீதியாகப் பெறப்பட்ட பெறுமானத்திற்கும், கணிப்பின் மூலம் பெறப்பட்ட பெறுமானத்திற்கும் இடையே ஒற்றுமை அல்லது வேற்றுமைக்கான காரணத்தைத் தருக.

(iii) $NH_4Cl(s)$ இன் நியமத் தோன்றல் வெப்பவுள்ளுறை - 315.5 kJ mol$^{-1}$ ஆகும்.
மேலே தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் தாக்கத்தின் நியம வெப்பவுள்ளுறை மாற்றத்தினைக் காண்க.

$$NH_4Cl(s) \rightleftharpoons NH_3(g) + HCl(g)$$

(b) V கனவளவு உடைய பாத்திரமொன்றில் குறித்த திணிவு $NH_4Cl(s)$ எடுக்கப்பட்டு வெப்பமேற்றிய போது பின்வரும் சமநிலை உருவாகியது.

$$NH_4Cl(s) \rightleftharpoons NH_3(g) + HCl(g)$$

320 K இல் He வாயுவையுங் கொண்ட தொகுதியில் ஆரம்ப அமுக்கம் $1.0 \times 10^5$ Pa ஆகும். மேற்படி சமநிலை அடைந்த பின்னர் தொகுதியின் அமுக்கம் $1.03 \times 10^5$ Pa ஆகும்.
(i) மேற்படி சமநிலைக்கான சமநிலைமாறிலி $K_p$, $K_c$ என்பவற்றைக் காண்க.

(ii) சமநிலையில் $NH_3$ இனதும் HCl இனதும் செறிவுகளைக் காண்க.


(iii) வெப்பநிலை 320 K இல் இருந்து 400K இற்கு அதிகரிக்கும்போது $K_p$ இன் பெறுமானம் அதிகரிக்குமா அல்லது குறையுமா என்பதற்கு விடைக்கான காரணத்தைத் தருக.

(iv) 400K இல் தொகுதியின் அமுக்கம் $1.50 \times 10^5$ Pa தரப்பட்ட வெப்பநிலையில் மேலே சமநிலைத் தொகுதியின் $K_p$ இன் பெறுமானத்தைக் காண்க.


(c) (i) ஏபர் முறையில் அமோனியா வாயு பின்வரும் முறையில் தயாரிக்கப்படும்.

$$N_2(g) + 3H_2(g) \xrightleftharpoons[450^{\circ}C - 500^{\circ}]{250 \text{ atm}, Fe(s) / Al_2O_3(s)} 2NH_3(g); \quad \Delta H = -92 \text{ kJmol}^{-1}$$

மேற்படி தாக்க நிபந்தனைகளும் ஊக்கியும் பௌதீக இரசாயனத் தத்துவப்படி எவ்வாறு கைத்தொழில் நிபந்தனையின் கீழ் உயர்ந்த திறனைப் பெறுவதற்கு துணை புரிகிறது என முழுமையாக விளக்குக.




மேலே வரைபடத்தை பிரதி செய்து 450°C இல் $N_2$ இனதும் $H_2(g)$ இனதும் மூலக்கூற்றுபரம்பல் வரைபடத்தை வரைக




மேலே வரைபடத்தை பிரதி செய்து 450°C இல் $N_2(g)$ இனதும் $H_2(g)$ இனதும் மூலக்கூற்று இயக்கசக்தி வரைபடத்தை வரைக

(a) (i) butanol கரைசல், 1 moldm$^{-3}$ ethanoic acid கரைசல், 0.5 moldm$^{-3}$ NaOH கரைசல் என்பவற்றுடன் வேறு ஆய்வுகூட வசதிகளும் உமக்குத் தரப்பட்டுள்ளது. butanol இற்கும் நீருக்கும் இடையில் ethanoic acid இன் பங்கீட்டுக் குணகத்தை எவ்வாறு துணிவீர் என விளக்குக.

(ii) நாளாந்த வாழ்க்கையில் பரம்பல் குணகத்தின் அறிவு பயன்படும் இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(b) (i) சேதனச் சேர்வையொன்று நீரிலும் பார்க்க பென்சீனில் கூடுதலாகக் கரையக்கூடியது. பென்சீனுக்கும் நீருக்கும் இடையில் இதன் பரம்பற் குணகம் 4 ஆகும். 20.00gl$^{-1}$ செறிவுடைய இச் சேதனச் சேர்வையின் 100ml பென்சினின் 100ml உடன் முதல் தடவை வடிக்கப்பட்டது. மீதிக் கரைசலின் 50ml பென்சினின் 50ml உடன் இரண்டாவது தடவை வடிக்கப்பட்டது. இரண்டாவது வடிப்பில்

(b) (i) சேதனச் சேர்வையொன்று நீரிலும் பார்க்க பென்சீனில் கூடுதலாகக் கரையக்கூடியது. பென்சீனுக்கும் நீருக்கும் இடையில் இதன் பரம்பற் குணகம் 4 ஆகும். 20.00gl$^{-1}$ செறிவுடைய இச் சேதனச் சேர்வையின் 100ml பென்சினின் 100ml உடன் முதல் தடவை வடிக்கப்பட்டது. மீதிக் கரைசலின் 50ml பென்சினின் 50ml உடன் இரண்டாவது தடவை வடிக்கப்பட்டது. இரண்டாவது வடிப்பில் மீதியாகப் பெறப்பட்ட கரைசலின் 25ml பென்சீனின் 25ml உடன் மூன்றாவது தட்வை வடிக்கப்பட்டது. மூன்றாவது பிரித்தெடுப்பின் பின்னர் மீதியாக விடப்படும் 25ml கரைசலில் காணப்படும் சேதனச் சேர்வையின் அளவைக் காண்க.

(ii) $RNH_2$ எனும் மென்மூலம் நீரில் கரையக்கூடியது. $RNH_2$ சேதனக் கரைப்பான் B இலும் கரையும், ஆனால் இக்கரைசலில் $RNH_2$ கூட்டலோ அல்லது கூட்டற்பிரிவோ அடைவதில்லை. நீரும் B யும் ஒன்றை ஒன்று முற்றாக கரையாது. 0.52 moldm$^{-3}$ $RNH_2$ நீர்க் கரைசலின் 50cm$^3$ உம் திரவ B இன் 50cm$^3$ உம் பிரிபுனலில் இடப்பட்டு பலதடவைகள் நன்றாகக் குலுக்கியபின் 25°C இல் சமநிலை அடையவிடப்பட்டது. இவ்விரு திரவங்களும் பிரிந்து கரையாத இருபடைகளை உருவாக்கியது. நீர்ப்படையின் pH 11 ஆகக் காணப்பட்டது.

25°C இல் $RNH_2$ இன் $K_b$ பெறுமானம் $2 \times 10^{-6}$ moldm$^{-3}$.
இதே வெப்பநிலையில் $K_w = 1 \times 10^{-14}$ mol$^2$ dm$^{-6}$

மேலே குறிப்பிடப்பட்ட சமநிலையில் பின்வருவனவற்றைக் காண்க.

(i) நீர்ப்படையில் $OH^-$ அயன்களின் செறிவு

(ii) நீர்ப்படையில் பிரிகையடையாத $RNH_2$ இன் செறிவு

(iii) சேதனப்படையில் பிரிகையடையாத $RNH_2$ இன் செறிவு

(iv) நீருக்கும் சேதனக் கரைப்பான் B இற்கும் இடையில் $RNH_2$ இன் பங்கீட்டுக் குணகத்தைக் காண்க.

(v) 25°C இல் நீர்ப்படையில் பிரிகையடைந்த $RNH_2$ இன் அளவு

(c) (i) டால்ரனின் பகுதியமுக்க விதியைக் கூறுக.

(ii) வாயுக்களின் இயக்கவியற் சமன்பாடு $PV = \frac{1}{3} mN\bar{c}^2$ இல் இருந்து டால்ரனின் பகுதியமுக்க விதியை பெறுக.

(iii) 8.314 dm$^3$ கனவளவுடைய பாத்திரமொன்றில் 25°C இல் He உம் HCl(g) உம் கொண்ட கலவை $1 \times 10^5$ Pa அமுக்கத்தில் காணப்படுகிறது. நீர் இக்கலவையினுள் சேர்க்கப்பட்ட போது HCl(g) முழுவதும் நீரில் கரைந்தது. பின்னர் 27°C இல் பாத்திரத்தில் அமுக்கம் $\frac{8}{9} \times 10^5$ Pa ஆகக் காணப்பட்டது. ஆரம்ப வாயுக்கலவையில் காணப்பட்ட He இனதும் HCl(g) இனதும் மூல் விகிதத்தைக் காண்க.

(a) (i) தாங்கற் கரைசல் என்றால் என்ன?
(ii) $CH_3COOH(aq)$ உம் $CH_3COONa$ உம் கொண்ட கரைசல் தொகுதிக்கு உரிய $PH = P_{Ka} + \log_{10} \frac{[Salt]}{[acid]}$ எனும் சமன்பாட்டை பெறுக.

(a) (i) தாங்கற் கரைசல் என்றால் என்ன?
(ii) $CH_3COOH(aq)$ உம் $CH_3COONa$ உம் கொண்ட கரைசல் தொகுதிக்கு உரிய $PH = P_{Ka} + \log_{10} \frac{[Salt]}{[acid]}$ எனும் சமன்பாட்டை பெறுக.

(iii) PH பெறுமானம் 5 ஆகவுடைய தாங்கள் கரைசலைத் தயாரிப்பதற்கு 0.1 moldm$^{-3}$ $CH_3COOH$ அமிலக்கரைசலுக்கு சேர்க்கப்பட வேண்டிய $CH_3COONa$ இன் திணிவைக் காண்க.
($Ka = 1.8 \times 10^{-5}$ moldm$^{-3}$, Na = 23, C = 12, O = 16, H = 1)

(iv) 0.2 moldm$^{-3}$ $CH_3COOH$ அமிலத்தின் 30 cm$^3$ உம் 0.2 moldm$^{-3}$ NaOH இன் 30 cm$^3$ உம் ஒருமிக்கக் கலக்கப்பட்டது.

விளைவுக் கரைசல் தாங்கற் செயற்பாட்டை காட்டாது எனவும் இது பாசிச் சாயத்திற்கு மூலமாகும் எனவும் கணிப்பின் மூலம் காட்டுக.

25°C இல் $K_a = 1.8 \times 10^{-5}$ moldm$^{-3}$
$K_w = 1 \times 10^{-14}$ mol$^2$dm$^{-6}$
$K_w = K_a \times K_b$

(b) (i) $Ag_2CrO_4$ நீரில் அரிதாகக் கரையும் சேர்வையாகும். $Ag_2CrO_4$ இன் நிரம்பிய கரைசலில் கரைந்த $Ag_2CrO_4$ இற்கும் கரையாத $Ag_2CrO_4(s)$ இற்கும் இடையே சமனிலைக்கான சமன்படுத்திய சமன்பாட்டைக் கருதி $Ag_2CrO_4$ இன் கரைதிறன் பெருக்கத்திற்கு கோவையொன்றைப் பெறுக.

(ii) $K_2CrO_4(aq)$ ஐ காட்டியாகப் பயன்படுத்தி KBr(aq), $AgNO_3(aq)$ ஆல் நியமிக்கப்பட்டது. காட்டியின் செறிவு 0.01 moldm$^{-3}$ நியமிப்பு நடைபெற்ற வெப்பநிலையில் AgBr இன் $K_{sp}$, $1 \times 10^{-12}$ mol$^2$dm$^{-6}$ உம் $Ag_2CrO_4$ இன் $K_{sp}$, $1 \times 10^{-12}$ mol$^3$ dm$^{-9}$ ஆகும். கரைசல் செங்கபிலமாக மாறும் போது $Br^-$ கரைசலில் இன் செறிவைக் காண்க. இதிலிருந்து இந்நியமிப்பிற்கு $K_2CrO_4$ பொருத்தமான காட்டி என நிரூபிக்க.

(c) (i) இரசாயனத் தாக்கமொன்றின் தாக்க வீதத்தைப் பாதிக்கும் காரணிகள் எவை?

(ii) $Fe^{3+}(aq)$ இற்கும் $I^-(aq)$ இற்கும் இடையிலான தாக்கவீதத்தில் $Fe^{3+}(aq)$ இன் செறிவு செலுத்தும் தாக்கத்தை காண்பதில் $Na_2S_2O_3$ இன் பயன்பாட்டை விளக்குக.

(iii) நீர்க் கரைசலில் ஐதரசன் பேரொட்சைட்டு பின்வருமாறு பிரிகையடையும்.

$$2H_2O_2(aq) \longrightarrow 2H_2O(l) + O_2(g)$$

பின்வரும் தரவுகள் ஐதரசன் பெரொட்சைட்டின் செறிவுடன் அதன் பிரிகை வீதம் எவ்வாறு வேறுபடுகிறது என்பதனை காட்டுகின்றது.

| வீதம் / moldm$^{-3}$ s$^{-1}$ | $[H_2O_2]$ / moldm$^{-3}$ |
|---|---|
| $3.64 \times 10^{-5}$ | 0.05 |
| $7.41 \times 10^{-5}$ | 0.10 |
| $1.51 \times 10^{-4}$ | 0.20 |
| $2.21 \times 10^{-4}$ | 0.30 |

பின்வருவனவற்றை உய்த்தறிக.
(I) தாக்கத்தின் வரிசை
(II) பரிசோதனை நிபந்தனைகளில் தாக்கவீத மாறிலி


(iv) 25°C இல் பின்வரும் தரவுகள் பெறப்பட்டன.

$E^{\ominus}$ $Mg^{2+}(aq) / Mg(s)$ = -2.37 V


$E^{\ominus}$ $Cu^{2+}(aq) / Cu(s)$ = + 0.34 V

(தொடரும்)

# வைத்தியசாலைகளை அபிவிருத்திசெய்ய பொதுமக்கள் முன்வரவேண்டும்



யாழ்.குடாநாட்டில் இயங்கும் வைத்தியசாலைகளின் நிலை குறித்து யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுடனான சந்திப்பின் தொகுப்பு இங்கு தரப்படுகின்றது. ஆ-ர்



அவர்கள் அமைத்துத் தந்தனர்.

இவ் இரண்டு வைத்தியசாலைகளை விட ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, கோப்பாய், கோண்டாவில், கொடிகாமம், சங்கானை, தெல்லிப்பளை மற்றும் காரைநகர் ஆகிய வைத்தியசாலைகளிலும் அபிவிருத்திக் குழுக்கள் இயங்குகின்றன.

ஒரு கட்டத்தில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது இவ் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்களினால் தனியார் மருந்தகங்களில் இருந்து பரசிற்றமோல் பெற்றுத் தரப்பட்டது.


இவ்வாறு வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுக்கள் மேலும் சிறப்பாக இயங்குமாயின் அப் பிரதேச மக்கள் சிறந்த வைத்திய சேவையை பெற்றுக் கொள்ளமுடியும்.

### சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு

வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கு என யாழ்.சுகாதாரத் திணைக்களத்திற்கு இவ் வருடத்திற்கு 12 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்னர் 20-25 மில்லியன் ரூபாய் வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்பட்ட இந் நிதி தற்போது 12 மில்லியன் ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளமையினால் வைத்தியசாலைகளின் அபிவிருத்திப் பணிகளை குறித்த ஆண்டிற்குள் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது.

உலக வங்கியினால் வழங்கப்பட்ட 5 மில்லியன் ரூபா நிதியுதவியில் வட்டுக்கோட்டை வைத்திய சாலையில் புதிதாக கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.



### பிரேத அறைகளின் புனரமைப்பு

பல பிரதேச வைத்தியசாலைகளின் பிரேத அறைகள் பல வருடங்களாக பயன்படுத்தப்படாமையினாலும், திருத்தப்படாமையினாலும் முற்றாக சேதமடைந்துவிட்டன.

யாழ்.சுகாதாரத் திணைக்களத்திற்குட்பட்ட வைத்தியசாலைகளில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும், வல்வெட்டித்துறை வைத்தியசாலையிலும் பிரேத அறை சீராக இயங்குவதுடன் அங்கு சடலங்கள் குளிரூட்டியில் வைக்கப்பட்டு பாதுகாக்கக் கூடிய வசதியுமுண்டு.

இவை தவிர்ந்த அச்சுவேலி, சாவகச்சேரி, சங்கானை ஆகிய வைத்தியசாலைகளில் பிரேத அறை அமைக்கப்பட்டுள்ள போதிலும் இவ் வைத்தியசாலைகளில் பிரேத பரிசோதனைமேற்கொள்வதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வருகை தருவாராயின் அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய வைத்தியசாலைகளிலும் பிரேத அறைகள் விரைவில் புனரமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த வைத்தியசாலைகளின் பிரேத அறைகளிற்கு குளிரூட்டி வசதி அமைப்பதற்கு அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களே முன்வர வேண்டும்.

இந் நிதியில் அச்சுவேலி, மானிப்பாய், கரவெட்டி மற்றும் பருத்தித்துறை மத்திய மருந்தகம் என்பவற்றின் கட்ட வேலைகள் நடைபெறுகின்றது.

### நிக்கொட் நிதியுதவி

நிக்கொட் திட்டத்தின் கீழ் 50 மில்லியன் ரூபா உதவியுடன் சாவகச்சேரி, அச்சுவேலி ஆயுர்வேத மருந்துக் களஞ்சியம், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, உரும்பிராய் மத்திய மருந்தகம் ஆகியவற்றின் கட்ட வேலைகள் நடைபெறுகின்றன. அத்துடன் சங்கானையில் மூலிகைத் தோட்டம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

### சர்வதேச சுகாதார மருத்துவக்கழகத்தின் உதவிகள்

இலங்கையைச் சேர்ந்த தமிழ் வைத்தியர்கள் ஒன்றிணைந்த சர்வதேச சுகாதார மருத்துவக் கழகத்தினர் (IMHO) யாழ்.மாவட்டத்தில் பல்வேறு உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றனர்.

இதில் தெல்லிப்பளை வைத்தியசாலை புனரமைப்பிற்கு இதுவரை 3 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளனர்.

மேலும் தீவகம் போன்ற கஷ்ரப்பட்ட பிரதேசங்களில் சேவையாற்றும் வைத்தியர்களிற்கு மாதாந்தம் ஊக்குவிப்புத் தொகையாக இரண்டாயிரம் ரூபாவினை வழங்கி வருகின்றனர்.

அத்துடன் யாழ். மாவட்டத்திலுள்ள போசாக்கு குறைந்த ஆயிரம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான போசாக்கு உணவுப் பொருட்களை சர்வதேச சுகாதார மருத்துவக் கழகத்தினரின் நிதியுதவியுடன் சுகாதார சேவைகள் திணைக்களம் வழங்கி வருகின்றது.

மேலும் அவசர தேவைகளை மேற்கொள்ளவும் அக்கழகம் நிதியுதவி வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### யாழ்.மாவட்டத்தில் 20 வீதமான குழந்தைகள் நிறைகுறைவாக பிறக்கின்றனர்

அண்மைக்காலமாக யாழ்.மாவட்டத்தில் 20 வீதமான குழந்தைகள் நிறைகுறைவானதாக பிறக்கின்றனர். இதற்கு தாய்மாரின் போசாக்கு குறைபாடே காரணமாகும்.

இதனால் எதிர்காலத்தில் போசாக்கு குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் அபாயம் தோன்றியுள்ளது.

### பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வு திட்டம்

பெண்பிள்ளைகளின் போசாக்குக் குறைபாடை நீக்குவதற்கு யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரம் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவிகள் மட்டத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை சுகாதார சேவைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

குறித்த வகுப்புகளில் கற்கும் மாணவிகளில் 28 வீதமானவர்கள் அவர்களின் வயதிற்கு ஏற்ப நிறை, உயரம், உடற்திணிவு சுட்டெண்) இல்லாதிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு.

- வறுமை காரணமாக உணவு கிடையாமை.
- பாடசாலை-ரியூசன் என படிப்புகளில் கவனம் செலுத்தும் ஒரு பகுதியினர் நேரமின்மையால் சத்துணவுகளை உண்பதில்லை.
- உடல் பருமனை குறைப்பதற்காக சத்துணவுகளை உண்ணாமை போன்றன காரணங்களாக அமைகின்றன.

இவ்வாறு பெண் பிள்ளைகளின் போசாக்கு குறைபாடு ஏற்படுகின்ற போது அதனை நீக்குவதற்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் சாப்பாட்டில் பின்வருவனவற்றை கவனிக்க வேண்டும்.

- சாப்பாட்டு வேளைகளில் அவர்கள் சீராக உணவு உட்கொள்கின்றனரா என்பதை கவனித்தல்.
- விலைகூடிய உணவுப் பொருட்கள் என்பதற்காக அதில் போசாக்கு அதிகம் உண்டென எண்ணலாகாது இருக்கலாம். ஆனால் அதில் போசாக்கு குறைவாகவும் இருக்கலாம்.

எனவே பிள்ளைகளிற்கு போசாக்கான உணவுகளை வழங்குவதை உறுதிசெய்ய வேண்டும்.

ஆசிரியர்கள் தமது கண்காணிப்பில்

- மாணவிகள் பாடசாலைக்கு போசாக்கான உணவுகளை கொண்டு வருகின்றனரா என அவதானித்தல் அல்லது பாடசாலையில் வழங்கப்படும் சத்துணவுகளை உண்கிறார்களா என அவதானித்தல்.
- உரிய நேரத்திற்கு மாணவர்கள் சாப்பிடுகிறார்களா எனக் கண்காணித்தல் வேண்டும். இத்தகைய கண்காணிப்பு இருக்கும்போதே எதிர்காலத்தில் போசாக்கான பெண்களும் அதன்வழி ஆரோக்கியமான குழந்தைகளையும் பெற்றெடுக்க முடியும்.

இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ◆

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் நேரடிச் சந்திப்பு

பிரதேச வைத்தியசாலைகளை மக்கள் தமது வைத்தியசாலைகள் எனக் கருதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதன் மூலமாகவே அவற்றினால் துரிதமாக நிலைத்து நின்று சேவை ஆற்றமுடியும்.

குறிப்பாக ஒவ்வொரு வைத்தியசாலையிலும் அபிவிருத்திச் சங்கம் நிதிப்பலத்துடன் இயங்குமாயின் அவசர மருந்துகளை கொள்வனவு செய்தல் மற்றும் வைத்தியசாலையின் அவசர அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியும்.

இதன்மூலம் வைத்தியசாலையின் சேவை. அப்பகுதி மக்களுக்கு பூரணமாகக் கிடைப்பதுடன் நீடித்து நிலைத்திருக்கும்.

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை எடுத்துக்கொண்டால் அவ் வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு சிறப்பாக இயங்குகின்றது.

இதனால் அங்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன் வைத்தியசாலையின் சேவையும் சிறப்புற நடைபெறுகின்றது.

அவ் வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு, அரசாங்க ஊழியர்கள், பொதுமக்கள் அப் பகுதியைச் சேர்ந்த வெளிநாடுகளில் வசிப்பவர்களிடமிருந்து நிதியினைத் திரட்டி அதன்மூலம் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கின்றது.

இதில் பெண்கள் மருத்துவ விடுதி சுமார் 14 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது.

தொடர்ந்து 15 இலட்சம் ரூபா செலவில் சிறுவர் மருத்துவ விடுதி அமைக்கப்படுகிறது.

இதனைவிட இன்னும் இரண்டு மருத்துவ விடுதிகள் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் வைத்தியசாலையின் பல்வேறு அத்தியாவசிய தேவைகளையும் அபிவிருத்திக்குழு மேற்கொள்கின்றது.

இதனைவிட கரவெட்டி வைத்தியசாலையை எடுத்து நோக்கினால் அதன் அபிவிருத்திக்குழுவின் வங்கிக் கணக்கில் 5 மில்லியன் ரூபா வைப்பில் உள்ளது.

இவ் வைப்பின் மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தைக் கொண்டு தேவையான செலவுகளை மேற்கொள்ள முடிகின்றது.

இதனால் அங்கு உடனடித் தேவைகள் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக அவ் வைத்தியாசாலைக்கு தற்போது புதிய காணி கொள்வனவு செய்யப்பட்டு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

அங்கு குடிநீர் வசதிக்காக கிணறு அமைக்கப்பட வேண்டுமென அபிவிருத்திக்குழுவிடம் நாம் கேட்டபோது அதனை உடனடியாக


சந்திப்பு
ஆர்.யூ.பாலமுருகன்
வி.கோபிகிருஷ்ணா

# ஜனநாயக ரீதியான தீர்வுத்திட்டமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு

டிலான் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ரீதியான தீர்வுத் திட்டத்தின் மூலமாக மாத்திரமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொடுக்க முடியும் என்று நீதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.




மாகாண சபை அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பாதுகாத்தலுக்கு தேசிய செயற் குழுவொன்றை அமைத்தல் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் இக் கருத்தினைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும், சிலர் இந்த விவகாரம் தொடர்பாக மேம்படுத் தப்பட்ட பிழையன கருத்துக்களை மக்களுக்கு வெளிக்காட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பொஸ்னிய செர்பிய முன்னாள் தலைவர் கராடிச் போர்குற்றங்கள் தொடர்பாக கைது

(கொழும்பு)

போர்க்குற்றங்கள் தொடர்பாக



தேடப்பட்டு வந்த முன்னாள் பொஸ்னியசெர்பிய தலைவரான ராடோவான் கைது செய்யப்பட்டிருப்பது குறித்த தகவல்களை செர்பிய அதிகாரிகள் வெளியிட்டுள்ளார்கள்.

அறுபத்து மூன்று வயதான கராடிச் கடந்த பதின் மூன்று ஆண்டுகளாக பிடிபடாமல்இருந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை மாலை செர்பியப் படைகளால்தடுத்து வைக்கப்பட்டார்.

பெல்கிரேட் நகரில் ஒரு பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது கராடிச் பிடிபட்டார்என அவரது வழக்கறிஞர்கூறியுள்ளார்.

போலி ஆவணங்களை கொடுத்து தனது மருத்துவ தொழிலுக்கு மாற்றாக வேறு பணிகளைச் செய்து தலைநகர் பெல்கிரேடின் புறநகர் பகுதியில் தனது ஜீவனத்தை அவர் நடத்தி வந்துள்ளார் என்று செர்பியபோர் குற்றங்களுக்கான தலைமை வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். செய்தியாளர்களுக்கு காண்பிக்கப்பட்ட புகைப் படத்தில் அவர் மெலிந்து, நீண்ட வெள்ளைத் தாடியும் தடித்த கண்ணாடியும் அணிந்திருப்பது காணப்பட்டது. (அ)

# மீள்குடியேற்ற நடவடிக்கைக்கு பொறுப்பாக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி நியமனம்

(வவுனியா)

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் மீள் குடியேற்றத் திட்டங்களை நடைமுறைப் படுத்தும் நடவடிக்கைக்குப் பொறுப்பாக ஓய்வு பெற்ற மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட உப அலுவலகங்கள் திறக்கப்பட்டு அவற்றுக்குப் பொறுப்பாக முன்னாள் இராணுவ அதிகாரியான பிரிகேடியர் லால் வீரக் கோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

போர் காரணமாக சொந்த இடங்களை விட்டுவெளியேறிய மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற்றும் நடவடிக்கைகளை மீள் குடியேற்ற அமைச்சு அகதிகளுக் கான ஐ.நா. தூதரகத்தில் (யு.என்.எச்.சி.ஆர்) உதவியுடன் ஆரம்பித்துள்ளது.

இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் , அங்கு முன்னர் வசித்த மக்கள் மீள் குடி அமர்த்தப்படவுள்ளனர். இந்த மாவட்டங்களில் புதிதாக குடியேற்றத்திட்டங்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சார்க் அமைப்பில் தமிழீழமும் ஓர் அங்கம்

## போர் நிறுத்தத்திற்கு விடுதலைப்புலிகள் விளக்கம்

(வவுனியா)

சார்க் அமைப்பில் தமிழீழ தேசமும் ஒரு அங்கத்துவ நாடு என்பதை வெளிப்படுத்தும் முகமாகவே அந்த மாநாடு நடைபெறும் காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் சு. ரவி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில்கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற 'நினைவழியா பெருமனிதன்' நூல்வெளியீட்டு நிகழ்வில் சிறப்புரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சார்க் மாநாட்டை சாட்டாக வைத்துக்கொண்டு இலங்கை அரசு ஒரு காயை நகர்த்தியது.

அது யாதெனில், இந்தியத் தலைவருக்கு இலங்கையில் பாதுகாப்பளிக்க முடியாது. புலிகளால் இந்தியத் தலைவருக்கு உயிர் ஆபத்து உள்ளது. ஆகவே, அவரின் பாதுகாப்பிற்கு இந்தியப்படையை அனுப்புங்கள் – என்று பொய்யான தகவலை அரசு இந்தியாவுக்குத் தெரிவித்தது. இதனை தென்னாசிய நாடுகளும் நம்பியிருக்கலாம்.

விடுதலைப் புலிகளையும் இந்திய அரசையும்சிண்ட முடிந்து விடும் வேலையில் அரசு இறங்கி யுள்ளது.

இந்நிலையில், எமது விடுதலை இயக்கம் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்த அறிவித்தலை வெளியிட்டு, சார்க் மாநாட்டுக்கான தனது ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளது.

எமது விடுதலைப் போராட்டம் எமது மக்களுக்கானதே. அது தென்னாசிய பிராந்திய நாடுகள் உட்பட எந்த நாட்டுக்கும் எதிரானதல்ல என்பதை எமது தேசியத் தலைவர் கடந்த மாவீரர்நாள் உரையில் தெளிவாக விளக்கியுள்ளார்.

ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சார்க அமைப்பில் இருக்கின்ற ஆறு நிலையான நாடுகளுடன் அதில் எமது. தேசத்தையும் ஒரு அங்கமாக கருதுவதால்தான் சார்க் அமைப்புக்கான தமது ஆதரவை விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதுடன் இலங்கை அரசின் பொய்யான பரப்புரைகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்துள்ளனர் என்றார் அவர். (அ-5)


# திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரி

## வளாகம் கடந்த பரத நாட்டிய பட்டப்படிப்பு

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து கலைத் தூது அழகியல் கல்லூரி நடத்தும் பரதநாட்டிய வளாகம் கடந்த பட்டப்படிப்புக் கான புதிய ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்வாண்டில் பரீட்சைகளும் பயிற்சி வகுப்புக்களும் யாழ்ப்பாணத்திலேயே வெற்றிகரமாக நடத்தப்பட்ட நிலையில் இப் புதிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

☼ *பட்டப்படிப்புகள்*

1. முது நுண்கலைமாணி (MFA) –2 வருடம்
2. இள நுண்கலைமானி (BFA) –3வருடம்
3. பெருஞ்சான்றிதழ் கற்கை (Dipiomain Dance)–1 வருடம்

தரச் சிறப்புமிக்க மேற்படி கற்கை நெறிகள் தொடர்பான மேலதிக விபரங்களை பெறவும் பதிவுகளை மேற்கொள்ளவும் எமது கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி.

கலைக்கோட்டம்,
இல 128, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம், தொலைபேசி : 021 222 9419 (சி/1350)


# வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

**கடுக்காய்**

Botanical Name-Terminalia chebula
Family - Combretaceae
Engl - Chebulic myrobalan
Sinh - Aralu

கடுக்காய் 20 மீற்றர் உயரம் வரை வளரக்கூடிய பசுமையான மரம்.

இலைகள் தடிப்பாகவும் முட்டை வடி வானதாயும் இருக்கும்.



இலைகளில் Galls எனும் பூச்சிக் கூடுகள் தோன்றும், 7.5 - 12.5 செ.மீ.நீளமான இலைகள். தனியிலை, ஒன்றுவிட்ட(Simple and Altern ate) இலையமைப்பை உடையவை. மலர்கள் சிறியவை, வெண்ணிறமானவை. இருபாலானவை. சித் திரை மாதத்தில் பூக்கும். கிளைகளின் நுனியில் மஞ்சரியாக அமைந்து காணப்படும். பழங்கள் மஞ்சள் நிறமானவை. 2-4 செ.மீ நீளமுடையவை. 5வரிப் பள்ளங்கள் கொண்டவை.

யாழ் மாவட்டத்தில் கொக்குவில், மட்டுவில், கடுக்காய் முடுக்கு வீதி, மீசாலை போன்ற இடங்களில் பரம் பல் காணப்படுகின்றது. வேர்க்கன்று கள் மூலம் இதனை இனவிருத்தி செய்யலாம்.

முதிர்ந்த உலர் கனிகளே மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது. இதனைவிட கடுக்காய்பிஞ்சு, கடுக்காய் புற்று போன்ற பகுதிகளும் மருத்து வத்தில் பயன்படுத்தப் படுகின்றது.

சித்த மருத்துவ சிகிச்சை முறையில் கடுக்காய் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏனெனில் கடுக் காயில் அறு சுவைகளுள் உப்பு சுவை நீங்கலாக மற்ற ஐந்து சுவைகளும் இதில் அடக்கியிருக்கின்றன. ஆகையால் இது முக்குற்ற அளவாகியவாத, பித்த, கப பிணிகளை போக்க வல்லது. மேலும் பசியை தூண்டி செரிமா னம் அடையச் செய்து ,உடற் கட்டுக்க ளுக்கு வன்மை தந்து, முதுமைவர வொட்டமெற் செய்யும். அன்றியும் வாழ்நாள்பெருக்கையும், அறிவையும், ஆற் றலையும் தரும். ஆகையால் கருக்காய் காய கற்ப பொருளாகக் கருதப் படுகின்றது.

**பயன் படுத்தும் முறை**

கடுக்காய் உலர் கனியினுள் . இருக்கும் விதையை நீக் கி, வெளிக்கனி யங்கள் நிழலில் உலர்த்தி பொடித்து, அரித்து, சீவாவில் பத்திரப்படுத்தி பயன்படுத் தலாம். மேற்படி தூளில் 1–2 கிராம் அளவு, காலை, மாலை.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன்** (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

1. புரட்டாதி மாத நடுவிலிருந்து கார்த்திகை மாத மையம் வரையில், கற் கண்டு தூளுடன் கலந்து உட் கொள்ளவும். ஏனெனில், இக் காலங் களில் பித்தச்சத்தானது கெட்டுவிடுவதால் அதனை சமப்படுத்தச் செய்யும்.

2. கார்த்திகை மாத மையப்பாகத் திலிருந்து தைமாத மைய பாகம் வரையில் சுக்குத் தூளுடன் கலந்து சாப்பிட வேண்டும். இக் காலங்களில் பித்தம் குறைந்த போவது இயல்பாகையால், அவ்விதக் குறைவு நேரிடாமல் இருப் பதற்கு உதவும்.

3. தை மாத மையத்திலிருந்து பங் குனிமாத மையப்பாகம் வரையில் அரிசித்திப்பிலித் தூளுடன் கலந்து உட் கொள்ள வேண்டும். ஏனெனில் அக் காலங்களில் கபம் அதிகரிப்பது இயல் பாகையால், அவ்விதம் அது அதி கரிக்காமலிருப்பதற்காகவேயாம்.

4. பங்குனி மத்தியிலிருந்து வைகாசி மாத மையபாகம் வரையில் தேனில் குழைத்து சாப்பிட வேண் டும். ஏனெனில் கபம் நிலைமாறுவது அல்லதுகெட்டுப்போவது இயல்பாகை யால், அதனை நிலைப்படுத்த அவ் வாறு பயன்படுத்த வேண்டும்.

5. வைகாசி மாத மத்தியிலிருந்து ஆடிமாத மையப்பாகம்வரை வெல்லத் துடன் சாப்பிட வேண்டும். ஏனெனில் இக் காலப்பகுதியில் வாதம் அதிகரிப் பது இயல்பாகையால், அதனை குணப் படுத்தவாகும்.

6. ஆடி மாத மையப்பாகத்தி லிருந்து புரட்டாதி மாத மையப் பாகம் வரை உப்புடன் கலந்து சாப்பிட வேண் டும். ஏனெனில் அக் காலப் பகுதியில் பித்தம் அதிகரிப்பது இயல்பாகையால் அதனை சாந்தப்படுத்தவாகும்.

இக்கால வேறுபாட்டு இயல்பை நினைவில் நிறுத்தி வைத்து தகுந்த அனு பானங்களுடன் கடுக்காய்த் தூளை பயன்படுத்தி வந்தால் மேற் கூறிய நற்பயன்களை பெறலாம்.

☼ கடுக்காய் பற்பொடி

கடுக்காய்தூளைநன்றாகபொடித்து, பல்துலக்க பல் இறுகும். முரசிலிருந்து இரத்தம் வடிதல் நிற்கும்.

☼ கடுக்காய் ஊறல் குடி நீரை 15 – 30 மி.லீ வரை அருந்த மலக்கட்டு தீரும்

☼ கடுக்காயின் வெளித்தோலை பாலிலரைத்து உட்கொள்ள கிரந்தி, கரப்பான் ,சிரங்கு ஆறும்.

குறிப்பு :– சில வைத்தியர்கள் கடுக் காய் தூள்ளைக் கட்டி படாமல் வைத் திருப்பதாக இனிப்பு வாதுமைப் பருப் பைச் செக்கிலிட்டு ஆட்டி அதனை நெய்யை விட்டு கடுக்காய்த் தூளுடன் பிசிறியும் வைத்துக்கொள்வர். இத் தூளிற்கு நெய்ப்பசை இருப்பதுடன் , செய்திறனும் அதிகமாக இருக்கும் என் பது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.


# திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரி

## ஆங்கில மொழிக்கற்கை நெறி

க.பொ.த (சா/த) (உ/த) சித்தி அடைந்தவர்களுக்கும், அலுவலக உத்தியோ கஸ்தர்க்ளுக்குமான ஆறுமாத கால ஆங்கில மொழிக் கற்கை நெறிகள் (Spoken உட்பட) எமது கல்லூரியில் ஆரம்பமாக வுள்ளன.

விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் கல் லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

*தொடர்புகளுக்கு,*

அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி.

கலைக்கோட்டம்,
இல 128, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம், தொலைபேசி : 021 222 9419 (சி/1349)

சுயநலம் என்ற நெருப்பானது –முதலில் மற்றவர்களை புசிக்கிறது; பின்னர் தன்னையே புசிக்கிறது.

–ரஷ்யா

வலம்புரி

## மன்மோகன் சிங்கின் அரசு விட்ட தவறை நிவர்த்திக்க வேண்டும்

இந்திய மத்திய அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் மயிரிழையில் தப்பித்துக் கொண்டது.

மன்மோகன் சிங்கின் அரசு மீதான நம்பிக்கையை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொண்ட எதிர்க்கட்சிகள் ஆளுமை அற்ற அரசு என விமர்சித்திருந்தன. இருந்தும் சில வாக்குகளால் மத்திய அரசு தப்பியுள்ளது.

மத்திய அரசு கோரிய நம்பிக்கை வாக்கெடுப்பு தோல்வியடைந் திருக்குமாயின் ஆட்சியில் இருந்த கூட்டணிக் கட்சிகளின் மாநில அரசுகளும் கலைபட்டுப்போயிருக்கும்.

குறிப்பாக, தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கலைஞர் கருணாநிதியின் மாநில அரசு இருந்த இடம் தெரியாமல் போவதற்கானசந்தர்ப்பம் அதிகமாக இருந்திருக்கும்.

எனினும் அதிர்ஷ்டவசமாக மன்மோகன் சிங் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தப்பிப் பிழைத்துள்ளது.

இவ்வாறு தப்பிப்பிழைத்தாலும் நீண்டகாலம் அந்த அரசின் ஆயுள் நீடிக்கும் எனக் கூற முடியாது.

ஜனநாயகப் பண்பு மிகுந்த இந்தியாவில் எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்ந்துவிட்டால் அங்கு கட்சிகள் என்ற எல்லை கடந்து பாரததேசம் என்ற உணர்வே மேலோங்கி நிற்கும்.

அவ்வகையில் மறைய நின்று மன்மோகன் சிங் மூலம் காங்கிரஸ் ஆட்சியை வழிநடத்தும் சோனியா காந்தி அம்மையார் தனக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து ஈழத்தமிழர்கள் நிம்மதியாக – நிரந்தர சமாதானத்துடன் வாழ வழி சமைக்க வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினையால் இந்திய நாட்டில் உள்ளகப் பிரச்சினை ஏற்படுவதாகப் பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டிருந்தமை இங்கு நோக்கு தற்குரியது.

அதேபோல் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படைக்கு எதிராக நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இலங்கை கடற்படையின் நிட்டூரம் நீடிக்கின்றபோதிலும், அது தொடர்பில் மத்திய அரசு அக்கறை கொள்வதாக இல்லை எனக் கூறியிருந்தார்.

இதற்கு மேலாக கச்சதீவை இலங்கையிடமிருந்து இந்தியா மீளப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற கருத்தை அ.தி.மு.கவின் பொதுச் செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா கூறியிருக்கின்றார். இதேகருத்தை நடிகர் விஜயகாந்தும் வலியுறுத்தியுள்ளார்.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதன் மூலமே இந்திய மத்திய அரசு உள்ளக இடைஞ்சல்களில் இருந்து தன்னைப் பாதுகாக்க முடியும்.

## இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பணிப்பாளருக்கு இனந்தெரியாத குழு அச்சுறுத்தல் -ஊடக அமைப்புகள்

(கொழும்பு)

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ரங்க கலன் சூரியாவை இனந்தெரியாத குழுவொன்று பின்தொடர்கின்றமை குறித்து தாம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக நாட்டின் முன்னணி 5 ஊடக அமைப்புகள் தெரிவித்துள்ளன. ஊடகவிய லாளர்களான நாமல் பேரேரா. கீர்த் நொயர் ஆகியோர் மீது தாக்குதல் நடத் தப்பட்ட சம்பவம் குறித்து இராணுவத் தளபதி கருத்து வெளியிட்ட மிகக் குறுகிய காலத்தில் இவ்வாறான ஒரு அச்சம் தரும் சம்பவம் நடைபெற்றிருப்பதாக ஊடக அமைப் புக்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் பணிப்பாளர் நாயகம் ரங்க கலன் சூரியாவின் வீட்டினை கடந்த சில தினங்களாக இரண்டு குழுக்கள் அவதானித்துவந்ததாகவும் இதில் ஒரு குழுவினர் காலை வேளையில் பொதி ஒன்றினை கையளிப்பது போல் பாவனை செய்து ரங்க கலன்சூரியாவைப் 'பற்றி விசாரித்ததாகவும் ஊடக அமைப்புக்கள் குறிப் பிட்டுள்ளனர்.

அத்துடன் இனந்தெரியாத நபர் ஒரு வர் கடந்த வாரம் தொலைபேசி மூலம் அவரையும் அவரது அலுவலக அதிகாரிகளையும் அச்சுறுத்தியதாகவும். இது தொடர்பில் நாரகேன்பிட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தாக்குதல்களுக்குள்ளான ஊடகவியலாளர்களான கீர் நொயர் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஆங்கில பிரிவின் பொறுப்பாளராகவும். நாமல் பேரேரா பத்திரிகை ஸ்தாபனத்தில் பதில் முகாமையாளராகவும் பணிபுரிந்தவர்கள் எனவும் ஊடக அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பெயருக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்றமை குறித்து தாம் ஏற்கனவே கவனம் செலுத்தி வருவதாகவும் 5 ஊடக அமைப்புக்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளன.

ஊடக சுதந்திரத்திற்கு எதிரான இந்த நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் புதிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஊடக அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-5)

## சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் அச்சத்தை விட்டு வாக்களிக்க வேண்டும்

### பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை நாடு பல்லின மக்கள். பல்லின மொழிகளைக் கொண்ட நாடு. இந்த நாடு ஒருமைப்பாட்டை காப்பாற்றுகின்ற ஒரு நாடு. சகல மக்களுக்கும் கல்வி. கலாசார. பாதுகாப்புக்கள் தேவை. ஜனநாயக ரீதியில் எல்லோரும் வாழக் கூடிய சூழ்நிலையை எதிர்பார்க்கின்றார்கள். இதனைக் காப்பாற்றுவதற்கு உண்மையான. நீதியான தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்று பிரதிக் கல்வி அமைச்சரும். இ. தொ.கா. வின் உப தலைவர்களில் ஒருவருமான எம்.சச்சிதானந்தன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது.

இம்முறை நடைபெறவுள்ள சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் மலையக மக்களுக்காக பிரதிநிதித்துவம் அவசியம். இம் மாகாணத்தில் உள்ள 1.100 ஆசிரியர்கள் தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்றார்கள். இவர்க ளுக்கென தனி நிர்வாகம் தேவை. பதவி உயர்வுகள் தேவை எனவே நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இம் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்க் கல்வி அமைச்சரை உருவாக்க வேண்டும்.

இத்தேர்தலை தீர்மானிக்கின்ற பொறுப்பு சிறுபான்மையினரிடமே உள்ளது. எனவே சிறுபான்மையினர் அனைவரும் ஒன்றிணைந்து இத்தேர்தலில் வாக்களித்தால் மாகாண சபை நிர்வாகம். நீதி ஒதுக்கீடுகள், அமைச்சர்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கும்.

இந்த நாட்டிற்கு 72 வீதம் அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்கின்ற இம் மலையக மக்களின் கல்வி. கலாசாரங்கள் உயர்வடைய வேண்டும். வேலைவாய்ப்புக்கள், அபிவிருத்திகள். மின்சாரம். படிக்கட்டுகள். தண்ணீர் வசதிகள். விளையாட்டு மைதானங்கள் என்பன அமைக்கப்படவேண்டும்.

எனவே நடைபெறவுள்ள இத்தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாக்களிப்பதன் மூலம் அனைத்து உரிமைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

அனைத்து மக்களும் பயத்தை விட்டு விட்டு வாக்களிக்க வேண்டும் இதற்கு அரசு அனைத்து மக்களுக்காகவும் பாதுகாப்புக்களைக் கொடுத்துள்ளது. (அ)

## மீண்டும் புலிகள் இயக்கத்தில் சேரப்போவதில்லை- கருணா

(கொழும்பு)

முன்னாள் புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாணப் பிரதேச தலைவராக இருந்து சில வருடங்களின் முன்னர் புலிகளிடமிருந்து பிரிந்து சென்ற கருணா மீண்டும் புலிகளுடன் சேரப் போவதாக சில தகவல்கள் வெளியாகி வருவதைத் தொடர்ந்து அண்மையில் சில வெளிநாட்டு ஊடகங்கள் தரப்பில் கிளப்பப்பட்ட சந்தேகங்கள் சம்பந்தமாக கருணா குறித்த ஊடகங்களுக்கு கருத்து கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணா மீண்டும் புலிகளுடன் சேரப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படியான வதந்திகளில் உண்மை கிடையாது எனவும் குறித்த தகவல்கள் முற்றிலும் பொய்யானவை எனவும் உறுதியாக கருணா கூறியதாக குறித்த ஊடகத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணா ஐக்கிய இராச்சியத்தில் சிறையிலிருந்து விடுதலையான பின்னரும் மற்றும் இலங்கைக்கு அனுப்பப்படுவதற்கு முன்னரும் பின்னரும் அவரை பல்வேறு வெளிநாட்டு. உள்நாட்டு ஊடகங்களின் பிரதிநிதிகள் சந்தித்துள்ளனர்.

ஆயினும் கருணா புலிகளோடு மீண்டும் சேரப்பபோவதாக ஒரு சில ஊடகங்களிலிருந்து சந்தேகத் தகவல்கள் வெளியாகிய பின்னரே கருணா மேற்படி தகவல்களை உறுதியாக மறுத்து மேற்படிகருத்துக்களை கூறியுள்ளார். (அ)

## எங்கும் எதிலும் நிறைந்தவர் பகவான் பாபா



மனிதர்கள் எவராலும் தெய்வீகத்தின் முழுமையான இயல்பை புரிந்துகொள்ள முடியாது. இறைவன் ஒருவனே என்றாலும் எங்கும் நிறைந்தவர். பகவான் பாபா தன்னை தெய்வ அவதாரம் என உலகிற்கு அறிவிக்காத காலம். அப்போது பகவான் பல அற்புதங்களைச் செய்துவந்தார். வீபூதி சிருஷ்டித்துக்கொடுப்பது ,அடியவர்கள் கேட்பதை உடனே கை அசைவில் எடுத்துக்கொடுத்தது... இதனால் பகவானின் குடும்பத்தவர் இவரை ஏதோ ஒரு கெட்டவாய்வு பிடித்து ஆட்டுகிறது என எண்ணினார்கள். இருந்தும் பகவானின் விசித்திர செயலை புரிந்துகொண்ட பகவானின் பள்ளித்தோழன் ராமராயூ என்பவர் சுவாமியின் தாய் தந்தையரிடம் அவருடைய தெய்வீக சக்திகளை எடுத்துக்கூறி சத்ய நாராயணனை தன் ஊரான பொல்லாரிக்கு அழைத்துச்செல்வதாகக்கூறி அழைத்துச்சென்றார். பெற்றாரும் வீடு மாறி இருந்தால் சில வேளைகளில் திருப்பங்கள் ஏற்படலாம் என நினைத்து நண்பனுடன் அனுப்பி வைத்தனர்.

ஒரு நாள் சுவாமியின் சகோதரர் பொல்லாரி சென்று நிலைமையைப் பார்த்தார். அன்று சிவன் கோவில் ஒன்றுக்குச் செல்வதற்காக சுவாமி ராமரயூவுடன் ஆயத்தமானார்கள். இவர்களுடன் பகவானின் சகோதர ரும் சென்றார். கோயிலை அண்மித்ததும் பகவான் சொன்னார். நான் உள்ளே வரவில்லை நீங்கள் சென்று வாருங்கள் எனக்கு உடம்பு சரியில்லை எனக் கூறி வெளியில் இருந்து விட்டார். இருவரும் கோயிலினுள்ளே சென்று வழிபட்டனர். அப்போது அர்ச்சகர் சிவனுக்கு கற்பூர ஆராத்தி காட்டும்போது பக்தர்கள் எல்லோரும் மூலஸ்தானத்தில் சிவனுக்கு பதிலாக பக வான் இருப்பதைக் கண்டனர். இதனைக் கண்ணுற்ற பகவானின் சகோதரருக்கு கோபம் கட்டுக்கடங்காது போகவே வெளி யில் ஓடிவந்தார். பகவானை நோக்கினார். பகவான் இருந்த இடத்திலேயே இருந்தார். செய்வது அறியாது பின்னால் வந்த ராமராயூவை மீண்டும் கோயிலுக்குள் அனுப்பி அங்கு மூலஸ்தானத்தில் என்ன நடக்கிறது என்று பார்த்து வரும்படி அனுப்பினார். பகவானை தான் காவல் காப்பது போல் பார்த்து நின்றார்.

கோயிலினுள் சென்ற ராமராயூ திரும்பவந்து, சாயி அங்கே உட்கார்ந்து இருக்கிறார் எனக் கூற அவர் ஆச்சரியம் அடைந்தார். உள்ளும் புறமும் காணப்படும் பகவான் எங்கும் நிறைந்தவர் எதிலும் நிறைந்தவர் அந்த நேரம் கோயிலினுள் நின்ற அனைவரும் வெளியே வந்து பகவானின் முகத்தைப் பார்த்தனர். ஆனால் எதுவும் நடவாது போல் அந்தத் திருமுகம் சாதா ரணமாகக் காணப்பட்டது.

ஜெய்சாயிராம் யாதவன்.

# உணவுக்கு திண்டாடும் நிலையில் நாட்டில் சார்க் மாநாடு தேவையா?

## சபையில் ஐ.தே.க.எம்.பி.ஜோன் அமரதுங்க கேள்வி

(கொழும்பு)

சார்க் வலய நாடுகள் பலவற்றில் இல்லை. இலங்கையில் உணவுக்கே இருக்கின்றது.



இவ்வாறானதொரு நிலையான அரசாங்கம் பெரும் திண்டாட்டமான நிலையில் 288 கோடி ரூபாவைச் செல வழித்து சார்க் மாநாடு தேவை தானா? என்று ஐ. தே. க.எம்.பி யான ஜோன் அமர துங்க சபையில்நேற்று முன் தினம் கேள்வி எழுப்பினார்.

சார்க் மாநாட்டிற் கான செலவீனங்களுக் கான குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில்,

வரவு-செலவுத்திட்டத்தில் வெளிவிவகார அமைச்சுக்கு 6.5 பில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தது. அதனை ஆறு மாதத்தில் செலவழித்துவிட்டு மேலும் 2.8 பில்லியன் (288 கோடிக்கு) அனுமதி கோரியிருக்கின் றது. அதற்கு ஐ.தே.க.ஆதரவு வழங்காது.

சாப்பாட்டிற்கு திண்டாட்டம். பாதுகாப்பில் பிரச்சினை, சார்க் வலய நாடுகளுள் பல நாடுகளில் நிலையான அரசாங்கம் இல்லை. அவ்வாறானதொரு நிலையில் 15ஆவது சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டும் என்று அரசாங்கமே பலவந்தமாகக் கோரி யுள்ளது.

சார்க் வலய நாடுகளில் பல நாடுகளில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் தலைவர்கள் வருகை தர மாட்டார்கள். இந்திய தலைவர் வருவாரா? மாட்டாரா? என்பது தெரியாதநிலையில் இவ்வாறானதொரு நிலையற்ற சூழ்நிலையில் சார்க் மாநாடு தேவைதானா? 15ஆவது சார்க் மாநாடு மாலைதீவில் நடத்தப்படவேண்டிய சந்தர்ப்பமாகும்.

வெளிவிவகார அமைச்சுக்காக ஒதுக்கப் பட்ட 6.5 பில்லியன் எவ்வாறு செலவழிந் தது? ஊழல் மோசடி எதுவும் இடம்பெற்றதா? என்பது தொடர்பில் வெளிவிவகார அமைச் சின் செயலாளர் தேடியறிய வேண்டும். இல் லையேல் நிதியமைச்சின் செயலாளருக்கு நடந்ததே அவருக்கும் நடக்கும். நிதியமைச் சின் செயலாளரை என்ன செய்யப்போகின் றீர்கள்? அமைச்சர்களின் விளையாட்டினால் அப்பாவி பொதுமக்களின் தலையே வெட்டப் படுகின்றது.

இந்திய, பாகிஸ்தான் தலைவர்கள் இல் லாத சார்க் மாநாடு தேவைதானா? வீடுகளை உடைத்து மக்களின் தலையில் ஆணியை அடித்தாவது மஹிந்த ராஜபக்ஷ சார்க் வலய நாடுகளின் தலைவராக முயற்சிக்கின் றார்.

வெளிநாட்டுக் கொள்கையில் அரசாங்கம் தோல்வியை தழுவிக் கொண்டுள்ளது. மனித உரிமைப் பிரச்சினையிலிருந்து விடுபடவோ, தடுத்து நிறுத்தவோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. மனித உரிமை குற்றச்சாட் டுக்கள் பொய்யானவை என்று கூறுவதற்கு தூதுவர்களுக்கு முடியவில்லை. இதன் பெறு பேறு தனிமனிதனையும் பாதிக்கின்றது.

இந்திய மீனவர்கள் பலியெடுக்கப்படுவது தொடர்பில் இந்தியப் பிரதமர் முதல் தடவை யாக தலையிட்டுள்ளார். இதன் காரணமாக வேனும் இந்திய தலைவர் சார்க் மாநாட்டிற்கு வருகை தராமல் விடலாம்.

அப்பாவி மக்களை வீடுகளிலிருந்து வெளியேற்றி சார்க் நாடகத்தை காண்பிப் பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளாதீர்கள் அதற்காக இலங்கையன் என்ற ரீதியில் வெட்கித் தலைகுனிகின்றேன்.

இதேமாதிரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 1977ஆம் ஆண்டு அணி சேரா நாடுகளை நடத்தி ஒரு வருடத்திற்குள் ஐ.தே.க.ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வெற்றியீட்டி யது. அதேபோல் நீங்களும் சார்க் மாநாட்டில் சந்தோஷமடையுங்கள் வட மத்திய, சப்ரக முவ மாகாணத்தில் மக்கள் நல்ல பாடம் புகட் டுவார்கள் என்றார். (அ)

# ஜனநாயகமும் நீதிக்கட்டமைப்பும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளன

## சபையில் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சட்ட விரோத சம்பவங்கள் அதிகரித்து பொது மக்களின் சுதந்திரம் பறிக் கப்பட்டு மனித உரிமைகளும் ஜனநாயகமும் மாத்திரமின்றி நீதிக்கட்டமைப்பும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சி யின் பிரதம கொறடா ஜோசப் மைக்கல் பெரேரா பாராளுமன்றத்தில் நேற்று தெரி வித்தார்.

இதற்கு முன்னர் கொழும்பு மாநகரை கேந்திரமாகக் கொண்டு உலக நாடுகளின் இராஜ தந்திரிகள் பலர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததாகவும் அந்த சந்தர்ப்பங்களில் கொழும்பு மாநகரில் வாழும் குடியிருப்பாளர் கள் பாதுகாப்பு காரணங்களுக்காக அவர் களது வீடுகளில் இருந்து வெளியேறுமாறு அவர்களுக்கு உத்தரவு இடப்படவில்லை யெனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள சகல மக்களுக்கும் வீடு அமைத்துக் கொடுக்க வேண்டியது அர சாங்கத்தின் பொறுப்பு மாத்திரம் இன்றி கட மையெனவும் ஆனால் அரசாங்கமோ கொழும்பு கொம்பனித் தெருப்பகுதியில் சுமார் 60 வருடங்களுக்கு மேல் வசித்து வந்த குடும்பங்களின் வீடுகளை இடித்து உடைக் குமாறு உத்தரவு இட்டது எனவும் எதிர்க்கட்சி பிரதம கொறடா பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

குடியிருப்புக்களை இடித்து தகர்ப்பதனை கைவிடுமாறு நீதிமன்றம் தடை உத்தரவு விதித்திருந்த போதிலும் அதனைப் பொருட் படுத்தாது அரசாங்கம் வீடுகளை இடித்து தகர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீதி மன்றத்தின் தடைஉத்தரவை மீறி செயற்பட்ட அரசாங்கம் அந்த வழக்கில் ஆய ரான சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் உடனடியாக இருப்பிடங்களில் இருந்து வெளியேமாறு அங்கு வாழும் பொது மக்களை அரசாங்கம் அச்சுறுத்தி வருவ தாகவும் பிரதம கொறடா சுட்டிக்காட்டினார்.

சிரமத்துக்குள் தள்ளப்பட்டுள்ள பொது மக்களுக்கு இழப்பீடு வழங்குவதுடன் நீதி மன்ற ஆணையை மீறியதன் காரணமாக நகர அபிவிருத்தி அதிகாரிகள் சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸாருக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் சபையில் அவர் கேட்டுக்கொண்டார்.

(அ)

# சார்க் மாநாட்டுக்காக வெவ்வேறு அரச நிறுனங்களுக்கு ஒதுக்கப்படும் நிதிக்கு பொறுப்பு கூறுவது யார்?

## சபையில் ரவி கருணாநாயக்க எம்.பி.கேள்வி

சார்க் மாநாட்டுக்காக வெவ்வேறு அரச நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் பல மில்லி யன் ரூபா பணத்துக்கு பொறுப்புக் கூறுவது யார் என்று ஐ.தே.க.வின் கொழும்பு மாவட்ட எம்.பி.ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற சார்க் மாநாட்டு செலவினங்கள் தொடர்பான குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய ரவி கருணாநாயக்க எம்.பி. மேலும் கூறியதாவது,

இந்த நாட்டிற்கு வெளிநாட்டு கொள்கை என்ற ஒன்று இருக்கின்றதா? சார்க் மாநாட் டுக்காக கோரப்படும் 288கோடி ரூபா மக் களின் பணத்தை செலவிடுவதற்கே கோரப் படுவதாக நான் கருதுகின்றேன்.

சார்க் மாநாட்டுக்கான ஆயத்தங்களுக் காக பல்வேறு நிறுவனங்களுக்கும் திணைக் களங்களுக்கும் பல மில்லியன் ரூபா ஒதுக் கப்படுவதாக அரசாங்கம் கூறியுள்ளது. இவ் வாறு ஒதுக்கப்படும் பணத்திற்கு கணக்கு காட்டுவது யார்? பொறுப்புச் கூறு வது யார்?

இந்திய படையினரும் பாகிஸ்தான் படை யினரும் தமது தலை வர்களை பாதுகாக்க இங்கு வரு வார்களென்றால் நாட்டின்



இறைமை எங்கே செல்கின்றது. வறுமையை ஒழிப்பதே சார்க் அமைப்பின் நோக்கமாக உள்ளபோது நாட்டின் வறுமையை அபிவி ருத்தி செய்வதற்கான நடவடிக்கையிலேயே அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. சார்க் மாநாட்டை நடத்துவதை நாம் எதிர்க்கவில்லை. மக்கள் வாழ முடியாத நிலையில் இருக்கும்போது பாரிய செலவில் மேற்கொள்ளப்படும் இந்த மாநாட்டில் மக்களுக்கு என்ன பயன் ஏற்படப் போகின்றது என்று கேட்க விரும் புகின்றேன் என்றார். (அ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பராமரிப்புப் பகுதி வேலைகளுக்கான திறன்சாராத் தொழிலாளர் (Unskilled) வழங்கல் சேவைக்கான விலைமனுக் கோரல்

மேற்படி சேவையை வழங்குவதற்கு பதிவு செய்யப்பட்ட நிறுவனங் களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மீளளிக்கப்படும் பிணைப் பணமாக ரூபா 10000/- மற்றும் மீளளிக்கப்படாத பிணைப்பண மாக ரூபா 250/- என்பவற்றை பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் கட்டிய பற்றுச்சீட்டை உதவிப்பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் ஒப்படைத்து கூறுவிலைப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை கடித உறையில் இட்டு அரக்கிடல் வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் "திறன் சாரா தொழிலாளர் வழங்குவதற்கான விலை மனு" என குறிப்பிட்டு பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது பதிவாளர் அலுவலகத்திலுள்ள விலை மனுப்பெட்டியில் நேரடியாக 08.08.2008 பி.ப.2.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படவேண் டும். மனுக்கள் அன்றைய தினம் பி.ப.2.30 மணிக்கு பரிசீலிக்கப்படும் போது மனுதாரர்கள் சமுகம் தரலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

(சி/1361) பதிற்பதிவாளர்


## துயர் பகிர்கின்றோம்


எமது வித்தியாலய விளையாட்டுத்துறையினரின் உதவிப் பயிற்றுநர் திரு.க.எழில்காந் (ராஜன்) அவர்களின் அன்புத் தந்தையார் திரு.சுப்பிர மணியம் கனகலிங்கம் அவர்கள்,

இறையடி சேர்ந்தமையிட்டு துயருற்று இருக்கும் அவர்தம் குடும்பத் தினரின் துயரில் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அஞ் சலிக்கின் றோம்.

யா/ஆவரல்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்,
மாணவர்கள்.

(1484)

# கொழும்பில் அடை மழை; முதல்நாள் ஆட்டம் பாதிப்பு



## 22 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டது



(கொழும்பு)

மழையால் பாதிக்கப்பட்டு தாமதமாக ஆரம்பமான முதல்நாள் ஆட்டத்தில் இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட்,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நேற்றுக் காலை 10.15 மணிக்கு ஆரம்பமாக இருந்தது.

கொழும்பில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக் காலை வரை மழை பெய்தது. இதன் காரணமாக ஆடுகளத்தின் வெளிப்புறப் பகுதியில் தண்ணீர் தேங்கியிருந்தது. இதனால் மைதானத்தின் பெரும் பகுதி தார்ப்பாயால் மூடப்பட்டது.

பின்னர் மழை நின்றபின் மைதானப் பராமரிப்பாளர்களினால் ஆடுகளம் சீர் செய்யப்பட்டு மாலை 3.30 மணிக்கு ஆட்டம்



ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் மகேல ஜெயவர்தன முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக வான்டொட், வர்ணபுர ஜோடி களமிறங்கியது.

முதலாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 7 ஓட்டங்களை மாத்திரம் எடுத்த நிலையில்; வான்டொட் 3 ஓட்டங்களை மாத்திரம் எடுத்த நிலையில் இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் தினேஸ் கார்த்திக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக வர்ணபுரவுடன் 'நம்பிக்கை நட்சத்திரம்' சங்கக்கார இணைந்தார்.

ஒரு புறத்தில் வர்ணபுர ஓட்டங்களை வேகமாக எடுத்தார். எனினும் மறு முனையில் நிதானமாக ஆடிய சங்கக்கார 12 ஓட்டங்களை மாத்திரம் எடுத்த நிலையில் சகீர் கானின் பந்துவீச்சில் ராவிட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது 57 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இலங்கை அணிக்கு 3-வது விக்கெட்டுக்காக வர்ணபுரவுடன் ஜோடி சேர்ந்த அணித்தலைவர் மகேல ஜெயவர்த்தன நிதானமாக ஆடினார்.

மறுமுனையில் ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய வர்ணபுர தனது அரைச்சதத்தை பூர்த்திசெய்தார். இந்நிலையில்போதிய வெளிச்சமின்மை காரணத்தினால் 22 ஓவர்கள் பந்துவீசிய நிலையில் முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அப்போது இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஆட்டமிழக்காமல் வர்ணபுர 50 ஓட்டங்களையும் அணித்தலைவர் மகேல ஜெயவர்தன 16 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான்,இஷாந்த் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (5)

# அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி டெஸ்ட் தொடரை கைப்பற்றுவோம்

## அணித்தலைவர் சிமித் கூறுகிறார்



(லீட்ஸ்)

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி எளிதில் கைப்பற்றுவோம் என தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித் மார் தட்டுகிறார்.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

லோட்ஸில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. இந்நிலையில் லீட்ஸில் நடந்த 2-வது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி துடுப்பாட்டம், பந்துவீச்சில் அசத்தி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 1:0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது.

இது குறித்து தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித் கூறியதாவது,

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் பந்துவீச்சு சுமாராக இருந்தது. ஆனால் லீட்ஸில் நடந்த 2-வது டெஸ்டில் பந்துவீச்சில் பல மாற்றங்களை ஏற்படுத்தியதால் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களை எளிதில் வீழ்த்தினோம்.

முதல் இன்னிங்ஸில் மோர்கல்,ஸ்ரையன் இருவரும் மிகத்துல்லியமாக பந்துவீசி ஆரம்ப வீரர்களை வெளியேற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் நிற்னியின் அபார பந்துவீச்சில் இங்கிலாந்து ஆரம்பம் ஆட்டம் கண்டது.

முதல் டெஸ்டில் பந்துவீச்சில் செய்த தவறுகளை விரைவில் திருத்திக் கொண்டதால் எளிதில் வெற்றி பெற முடிந்தது.

துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை பிரின்ஸ் மற்றும் டி வில்லியர்ஸ் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் முதல் இன்னிங்ஸில் இமாலய ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்ய முடிந்தது.

இந்த அசத்தல் ஆட்டம் இனிவரும் போட்டியிலும் தொடரும் பட்சத்தில் அடுத்த இரண்டு டெஸ்டிலும் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றுவோம். இவ்வாறு சிமித் கூறினார். (5)

# பாகிஸ்தானில் சம்பியன்ஸ் தொடர் ஐ.சி.சியின் முடிபு இன்று அறிவிப்பு

எட்டு நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் தொடர் பாகிஸ்தானில் செப்ரெம்பர் மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால் பாகிஸ்தானில் பாதுகாப்பான சூழல் இல்லை என்று கூறி அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்க அணிகள் இந்த தொடரில் பங்கேற்கத் தயங்கி வருகின்றன.

இதையடுத்து போட்டியை திட்டமிட்டபடி பாகிஸ்தானில் நடத்தலாமா? அல்லது வேறு நாட்டிற்கு மாற்றலாமா? என்பது குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை ஐ.சி.சி தீவிர ஆலோசனையில் இறங்கியுள்ளது..


இது தொடர்பாக ஐ.சி.சியின் நிர்வாகக் குழுவினர் தொலைபேசி மூலம் சம்மந்தப்பட்டவர்களுடன் இன்று மீண்டும் ஆலோசிக்கவுள்ளனர்.

இலங்கை சார்ப்பில் இலங்கை கிரிக்கெட் சபைத்தலைவர் ரணதுங்கவும் டெலிகான்பரன்சில் பங்கேற்கிறார். இதனடிப்படையில் ஐ.சி.சி தனது இறுதி முடிபை இன்று அறிவிக்கவுள்ளது. (5)

# உலக கோப்பைக்கு முன்பு ஹைடன் ஓய்வு பெறுகிறார்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மத்யூ ஹைடன் எதிர் அணி பந்துவீச்சாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறார்.

தற்போது எதிரணிப் பந்துவீச்சாளர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் வகையில் ஹைடன் முடிபு எடுத்துள்ளார். 2011ஆம் ஆண்டு உலகக் கோப்பைக்கு முன்பு ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,




இளைஞர்களுக்கு வழிவிடும் வகையில் மார்க்வோ ஓய்வு பெற்றார். அவரை பின் பற்றி நானும் ஓய்வு முடிபை எடுக்கிறேன்.

2011ஆம் ஆண்டு உலக கோப்பைக்கு முன்பு ஓய்வு பெற முடிபு செய்துள்ளேன். கடந்த ஒரு ஆண்டாக நான் காயத்தில் உள்ளேன்.

இதனால் அடுத்த உலகக் கோப்பை வரை ஆட விரும்பவில்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (5)

# அமெரிக்க டென்னிஸ் தொடர்; முதலாவது சுற்றில் சானியா வெற்றி

(லாஸ் ஏஞ்சல்ஸ்)


லாஸ் ஏஞ்சல்ஸ் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா, செக் குடியரசின் இவா ஹர்டினோவாவை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பெண்களுக்கான டபிள்யூ.டி.ஏ அந்தஸ்து பெற்ற ஈஸ்ட் வெஸ்ட் பாங்க் கிளாசிக் டெண்னிஸ் தொடர் நடக்கிறது.

நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, செக் குடியரசின் இவான ஹர்டினோவாவை சந்தித்தார்.

பரபரப்பான ஆட்டத்தில் சானியா முதல் செட்டை 6:3 எனக் கைப்பற்றினார்.

தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சானியா 6:4 என இரண்டாவது செட்டையும் தன்வசப்படுத்தினார்.



இறுதியில் சானியா, ஹர்டினோவாவை 6:3,6: 4 என்ற நேர் செட்டில் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்





இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களையடுத்து வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி மர நிழலில் தங்கியிருப்பதனைப் படத்தில் காணலாம். (படம்:- தமிழ்நெற்)

# சாதகமான பதிலை அரசு வழங்காவிடின் வினாத்தாள் மதிப்பீட்டுப் பணி பகிஷ்கரிப்பு

## ஆசிரியர் சேவை தொழிற்சங்கம் தெரிவிப்பு

தமது கோரிக்கைக்கு அரசாங்கம் சாதகமான பதிலை வழங்காவிடின் எதிர்வரும் கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளாமல் பகிஷ்கரிக்கப் போவதாக இலங்கை ஆசிரியர்கள் சேவை தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இதனை சங்கத்தின் பேச்சாளர் மகிந்த ஜெயசிங்க நேற்று முன்தினம் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். அதிபர், ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பை தமது கோரிக்கைக்கு அமையவாக அரசாங்கம் அதிகரிக்காவிடின் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குப் பின் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் பணியை இலங்கை ஆசிரியர்கள் சேவைத் தொழிற்சங்கம் பகிஷ்கரிக்கும்.

மாணவர்களின் நலன்கருதி அவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை தடைப்படாமல் ஒத்துழைப்பு வழங்குவோம். எனினும் அதன் பின்னரான பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணியை பகிஷ்கரிப்பதன் ஊடாகத் தாமதத்தை ஏற்படுத்தி அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுப்போம் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# ஊரடங்கு நேரம் குறித்து மக்கள் மத்தியில் குழப்பம்

யாழ்.குடாநாட்டில் பிறப்பிக்கப்படும் ஊரடங்கு நேரம் குறித்து வெளியான திடீர்த் தகவலினால் நேற்று மக்கள் மத்தியில் பதற்ற நிலைவியது. நேற்றிரவு 7 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருவதாகக் காவலரண்களில் நின்ற இராணுவத்தினரால் பொதுமக்களுக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து மக்கள் தமது கடமைகளை அவசர அவசரமாக முடித்துக் கொண்டு வீடுகளுக்குத் திரும்பினர். எனினும் நேற்றிரவு 9 மணிக்கே ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருவதாக பலாலிப் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தினால் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வன்னியில் இடம்பெயர்ந்த...

பொருள்களுக்கான தட்டுப்பாட்டை உருவாக்கியிருப்பதனால் இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் மக்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளில் முக்கியமான உணவுப் பொருள்களைக் கூட விநியோகிக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

இந்த நிலைமை காரணமாக சாதாரணமான குடியிருப்பு வசதிகளைக் கூட இடம்பெயர்ந்த மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பல மாதங்கள் எடுக்கலாம் எனவும் விடுதலைப்புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசத்தின் மீது இலங்கை அரசாங்கம் விதித்துள்ள தடைகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான அவசர நிவாரண உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பல சிக்கல்கள்ளை எதிர்நோக்கியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் பெய்யும் தொடர் மழையால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் துன்பங்கள் மேலும் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் வன்னிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் சொல்லொணாத் துயரங்களையும் கஷ்டங்களையும் எதிர்நோக்கியுள்ளார்கள்.

வன்னியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக உள்ளூரிலுள்ள செய்தியாளர்களும் இடம்பெயர்ந்துள்ள மக்களின் துன்பங்களை நேரில் பார்வையிட்டு வெளிக்கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் வன்னிப் பிரதேச மக்கள் தற்போது அனுபவித்து வருகின்ற துயர நிலைமையை வெளிக் கொண்டு வருவதற்குச் சர்வதேச செய்தியாளர்கள் வன்னிப் பிரதேசத்திற்குள் அனுமதிக்கப்படாமையும் ஒரு தடையாக அமைந்துள்ளது என விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அரசியல் கட்சிகளின் தேவைக்...

யதாவது,

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பிற்பாட்டிலிருந்து 2008 வரை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிவிலக்கினை பெற்றுக் கொள்வதற்கு அப்பொருள்களை விலைக்கு வாங்கும் நாடுகளின் இணக்கத்திற்கு இணங்க வரி விலக்கினை மேலும் மூன்று வருடங்களுக்கு நீடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை இலங்கைக்குக் கிடைக்காமல் செய்து அரசைக் கவிழ்ப்பதற்கான முயற்சியில் சில தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை இலங்கைக்குக் கொடுக்கப்படக் கூடாது என்ற வேண்டுகோளை அவர்கள் சர்வதேச மட்டத்தில் விடுப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

நாடு ஒன்றுக்குக் கிடைக்கும் நிவாரணமானது ஒரு நபருக்கோ அல்லது அரசாங்கத்து மட்டும் கிடைக்கும் நிவாரணம் அல்ல. அது நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்குமான நிவாரணமாகும்.

இலங்கையைப் பற்றித் தவறான பிரசாரங்களில் ஈடுபடும் நம்மவர்களில் சிலர் இதன் மூலமாக இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்க முனைவதுடன் இது முழு இலங்கையர்களையும் பாதிக்கக் கூடிய செயலாகும்.

இன்று நாம் அனைவரும் முதலில் நாட்டைப் பற்றிச் சிந்தித்தே தீர்மானம் எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. எனது பதவி காலத்தில் எச் சந்தர்ப்பத்திலும் இந் நாட்டுக்குக் கிடைக்கும் நிதியுதவியோ நிவாரணத்தையோ இல்லாமல் செய்ய மாட்டேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பீலிக்ஸ் பெரேரா, நியோமால் பெரேரா, ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, மீனவ அமைச்சின் செயலாளர் பியசேன உட்பட மாமிச உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ச-5)

# புலிகளின்...

தோல்விகளைத் தாங்கிக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் இதுபோன்ற அறிவிப்புக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் பழக்கமானதாகும். எனவே எமக்கு இதில் உடன்பாடில்லை. அரசாங்கமும் இதனை ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்திருந்த ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முப்படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்களைப் புலிகளால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. படையினருக்குப் பாரிய வெற்றிகள் கைகூடிக் கொண்டிருக்கின்ற அதேவேளை, பயங்கரவாதம் வெகுவிரைவாக அழிக்கப்பட்டு வருகின்றது என்றார். (ச-5)

# புலிகளின்...

காயமடைந்துள்ளனர். இது தொடர்பில் படைத்தரப்புச் செய்தி வருமாறு,

யாழ்.முகமாலையில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்கிப் படையினர் இருவர் காயமடைந்துள்ளனர்.

மன்னார் பேம்பியோடையில் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை மணலாறு ஜனகபுர வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.10 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதே பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.20 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். (ச-5)

# மனித உரிமைக்காகக் குரல் கொடுத்தவர்...

புரிந்த சமயம் மகிந்த ராஜபக்ஷ தனது நெருங்கிய நண்பராக இருந்தார். அச் சமயம் இளம் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அவர்,

இலங்கையின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குச் சர்வதேச சமூகத்துடனும் ஐக்கிய நாடுகள் சபையுடனும் இணைந்து குரல் கொடுத்தார். சர்வதேச மன்னிப்புச் சபையுடனும் ஐக்கிய நாடுகள் சபையுடனும் இணைந்து இலங்கையின் மனித உரிமைகளைப் பாதுகாக்க முனைப்புடன் செயற்பட்டார்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இந் நிலைமை முற்றிலும் மாற்றமடைந்துள்ளதாக டேவிட் க்ளேட்ஸ் டோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகின்றமை மற்றும் தாக்கப்படுகின்றமை குறித்த செய்திகளைக் கேட்டு பெரிதும் அச்சமடைந்தேன். இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம் சிம்பாவேயை விட மோசமானதாக இல்லை என தான் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ள அவர்,

ஆனால் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் காலத்தில் இந்தளவு மனித உரிமை மீறல்கள் நடைபெறவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் றிச்சட் டி சொய்சா, பிரேமதாசவின் ஆட்சிக் காலத்திலேயே கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டதாகவும் ஆனால் அச் சமயம் அவரது நிர்வாகத்தைக் கடுமையாக விமர்சித்த பெரும்பாலான ஊடகவியலாளர்களுக்கு எதிராகப் பாரியளவு தாக்குதல்கள் இடம்பெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரேமதாச பிரதமராக இருந்த சமயம் அவர் தனது நெருங்கிய நண்பராக இருந்ததாகவும் பின்னர் அவர் ஜனாதிபதியானதும் அந் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டதாகவும் டேவிட் க்ளேட்ஸ் டோன் பி.பி.சி. சிங்கள சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் அரசுக்கு எதிராக ஜே.வி.பியினர் ஆயுதம் ஏந்திய சமயம் இரு சாராரினாலும் சுமார் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தக் காலப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள், காணாமல் போதல்கள், சித்திரவதைகள் உள்ளிட்ட சகல விதமான மனித உரிமை மீறல்களையும் தான் கண்டித்ததாகவும் டேவிட் க்ளேட்ஸ் டோன் தெரிவித்துள்ளார். (ச-5)

# சுயநிர்ணய...

அரசாங்கம் கருதவில்லை எனவும் கூறினார்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவே அரசாங்கம் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றது. சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அரசாங்கம் தலை சாய்க்கப் போவதில்லை என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார். (ச-5)

# தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை...

தனிநாட்டுக் கோரிக்கையானது விடுதலைப்புலிகளின் கோரிக்கையல்ல. தனிநாட்டுக் கோரிக்கையானது தமிழர்களின் கோரிக்கை. இதற்காக கடந்த 50 வருடங்களுக்கு மேலாகத் தமிழர்கள் போராடி வருகின்றனர்.

எனினும் தமிழர்களின் கோரிக்கையைக் கடந்த காலங்களில் ஆட்சி செய்த பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் உதாசீனம் செய்து அடக்கி ஒடுக்கி ஆள முற்பட்டதாலேயே தமிழர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதாகச் சம்பந்தன் கூறியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே இரா.சம்பந்தன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

தமிழர்களின் கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். அல்லது பொருத்தமான அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன்வைப்பதாகக் கூறி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவை அரசாங்கம் நியமித்தபோதும் தற்பொழுது அதன் நடவடிக்கைகளில் நம்பிக்கையில்லை.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலையீடு காணப்படுகின்றது என்றார். தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர்,

சர்வதேசமே ஏற்றுக் கொண்டிருக்கும் சுயநிர்ணய உரிமையை இலங்கை அரசாங்கமும் ஏற்று தமிழர்களுக்கு அதனை வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

வடக்குக் கிழக்கிலிருந்து மக்களை வெளியேற்றிவிட்டு அங்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்குத் தற்போதைய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. கிழக்கில் குறிப்பாகத் திருகோணமலையில் இடம்பெயர்ந்த மக்களில் ஒரு தொகுதியினர் மீளக் குடியமர்த்தப்படவில்லை.

மக்கள் இடம்பெயர்ந்த சில இடங்களை இராணுவத்தினர் உயர் பாதுகாப்பு வலயமாக்கியிருப்பதாகவும் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கூறினார். சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளும் அரசாங்கம் சிங்கள மக்களைக் குடியேற்றும் பகுதிகளில் மாத்திரம் அபிவிருத்திகளை முன்னெடுத்துக் கொண்டு அனைத்துச் சமூகத்தினருக்குமான அபிவிருத்திகளை முன்னெடுப்பதாக உலகுக்குக் காண்பித்து வருவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (ச-5)

வந்துவிட்டது வெற்றித்தேர்வு !!
வெற்றித் தேர்வு.திருமலை.எஸ்.கணேசலிங்கம்
உதவிக் கல்விப் பணிப்பாளர், திருகோணமலை.
தரம்:5வெற்றித்தேர்வு-19,20,21,22
தரம்:4.வெற்றித்தேர்வு.1,2,3,4,5,6,7
மாவட்ட பரீட்சை வழமை போல்.
மாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.
ஞாயிறு சயன்ஸ் அக்கடமி நல்லூர். முருகன் ஆலயம் முன்பாக.
கணேசலிங்கம் யாழ்ப்பாணம் வருகின்றார்.
கருத்தரங்கு மிக விரைவில்.
2007அனேக மாணவர்களின் சித்திக்கு வித்திட்ட கருத்தரங்கு
மேலதிக விபரங்களுக்கு. 021 222 9016

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.